‘தமிழன்’ பத்திரிகை
வீடுகளுக்கு நேரடியாக
விநியோகிக்கப்படும்



QR ஐ ஸ்கேன் செய்து
தகவல்களை
பெற்றுக்கொள்ளுங்கள்.
0777983308



# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 04, இதழ்: 63 சோபகிருது வருடம், புரட்டாசி மாதம் 01ஆம் திகதி திங்கட்கிழமை
(18.09.2023) ஹிஜ்ரி 1445, ர.அவ்வல் - 02, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50





## புதிய பணியாளர்கள்
## இ.போ.ச. தீர்மானம்

பல்வேறு மோசடி சம்பவங்கள் காரணமாக மாதாந்தம் சுமார் 100 பஸ் நடத்துநர்களை பணிநீக்கம் அல்லது பணியிடை நீக்கம் செய்ய நேரிட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக பஸ்... 02 பக்கம்









# திருமலையில் வெறியாட்டம்!

## தியாகி திலீபனின் ஊர்தியை அடித்து நொறுக்கி சிங்களக் காடையர்கள் அட்டகாசம்

அப்துல் சலாம் யாசீம்

திருகோணமலையில் தியாகதீபம் திலீபனின் ஊர்தியை வழிமறித்த சிங்களக் காடையர் குழு அதனை அடித்து நொறுக்கி, அதில் பயணித்த பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் உள்ளிட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் மீது கொலை முயற்சி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

திருகோணமலை – கொழும்பு வீதி, சர்தாபுர பகுதியில் இந்த கொலைவெறித் தாக்குதல் நடந்தது.

தியாகி திலீபனின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி பொத்துவிலில் இருந்து பயணத்தை ஆரம்பித்து, வடக்கு நோக்கி பயணித்துக் கொண்டிருக்கிறது. நேற்று திருகோணமலை மூதூர், சேனையூர், தம்பலகாமம் பகுதிகள் ஊடாக திருகோணமலை நகரத்தை நோக்கி, திருகோணமலை – கொழும்பு வீதியில் குறித்த ஊர்தி பயணித்துக் கொண்டிருந்தபோதே, இந்த கொலைவெறித் தாக்குதல் நடந்தது.

சர்தாபுர பகுதியில் சிங்களக் காடையர்கள் கற்களை நடுவீதியில் போட்டு, வீதியை வழிமறித்திருந்தனர். அந்தப் பகுதியில் பொலிஸார் மற்றும் இராணுவ புலனாய்வுத்துறையினரும் பிரசன்னமாகியிருந்ததாகவும் பொலிஸார் தாக்குதலை தடுக்கத் தவறியதாகவும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் குற்றம் சாட்டினர்.

02 பக்கம்



## உஷ்

ஜனாதிபதி ரணிலை சந்தித்த பெசில் ராஜபக்ஷ எந்த எலெக்ஷனை முன்கூட்டி வைத்தால் ஆளுங்கட்சிக்கு நன்மை என்று விளக்கினாராம்..

அதன்படி, ஜனாதிபதித் தேர்தல் முற்கூட்டியே நடந்தால் நல்லது என்று கருதப்படுகிறதாம்..

ஆனால், பெசிலின் விளக்கத்தை கேட்டு நடப்பதா அல்லது உரிய காலத்தில் எலெக்ஷனுக்கு செல்வதா என்று யோசிக்கிறாராம் ரணில்...

## அதிக விளைச்சலைத் தரும் புதிய மாதுளை வகைகள்

### ஆராய்ச்சியில் கண்டறிவு



இலங்கையில் வெற்றிகரமாக பயிரிடக்கூடிய அதிக விளைச்சலைத் தரும் இரண்டு புதிய வகை மாதுளை வகைகளை விவசாயத் திணைக்களம் ஆராய்ச்சியொன்றில் கண்டறிந்துள்ளது.

இரண்டு புதிய மாதுளை வகைகளும் இலங்கையில்... 02 பக்கம்



## ஆசியக் கிண்ணம் இந்தியா வசம்
## மண்கவ்வியது இலங்கை

ஏ. அகீல் சிஹாப்

16ஆவது ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடரின் சம்பியனை தீர்மானிக்கும் இறுதிப் போட்டியில் நடப்பு சம்பியன் இலங்கையை 10 விக்கெட்கள் வித்தியாசத்தில் இலகுவாக வீழ்த்திய இந்தியா, 8ஆவது தடவையாகவும் சம்பியன் பட்டத்தை தட்டிச்சென்றது.

கொழும்பு ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் நேற்று(17) நடைபெற்ற ஆட்டத்தில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்று...

02 பக்கம்

## மாளிகாகந்த நீதிமன்றத்துக்கு அருகில் துப்பாக்கிச் சூடு

### 06 வயது மகள் பலி: தந்தை காயம்

மருதானை, மாளிகாகந்த நீதவான் நீதிமன்றத்துக்கு அருகில் துப்பாக்கிப் பிரயோகம் ஒன்று நேற்று(17) மாலை இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான தந்தையும் மகளும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில், 06 வயது மகள் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். கடந்த வருடம் நவம்பர் மாதம்... 02 பக்கம்

## யாழ். பல்கலைக்கழக மாணவி தற்கொலை

கிளிநொச்சி, கோணாவில் கிராமத்தில் யாழ். பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ மாணவி ஒருவர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார். 02 பக்கம்




# ஐ.நா. கூட்டத்தொடரில் பங்கேற்க ரணில் நியூயோர்க் சென்றடைந்தார்

கியூபாவில் நடைபெற்ற "ஜி77 + சீனா" அரசத் தலைவர்கள் உச்சிமாநாட்டில் கலந்து கொண்ட பின்னர், அமெரிக்காவில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 78ஆவது கூட்டத்தொடரில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று (17) அதிகாலை நியூயோர்க் நகரைச் சென்றடைந்தார்.

"2030 நிகழ்ச்சி நிரலுக்கான அமைதி, சுபிட்சம், முன்னேற்றம் மற்றும் நிலைபேறுத்தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கான நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்புதல் மற்றும் உலகளாவிய ஒத்துழைப்பை மீண்டும் உருவாக்குதல்" என்ற தொனிப்பொருளின் கீழ் இன்று செப்டெம்பர் 18 முதல் 21 வரை இம்முறை கூட்டத்தொடர் நடைபெறும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, செப்டெம்பர் மாதம் 21ஆம் திகதி கூட்டத்தொடரில் பங்கேற்று, தனது விசேட உரையை ஆற்றவுள்ளார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 78 ஆவது கூட்டத்தொடருக்கு இணையாக இன்று செப்டெம்பர் 18 ஆம் திகதி நடைபெறவுள்ள, 2030 ஆம் ஆண்டுக்கான மாற்றம் மற்றும் விரைவான நடவடிக்கைகள் என்பவற்றுக்காக உலகத் தலைவர்களினால் வழிகாட்டுதல்கள் வழங்கப்படும். 2023 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் உச்சி மாநாட்டின் அரச தலைவர்கள் சந்திப்பிலும் ஜனாதிபதி பங்கேற்கவுள்ளார்.

மேலும், ஜனாதிபதி, உச்சி மாநாட்டில் பங்கேற்கும் பல அரச தலைவர்களுடன் இருதரப்பு கலந்துரையாடல்களை நடத்தவுள்ளதுடன் கடல்சார் நாடுகளுக்கான ஆசிய-பசுபிக் தீவு நாடுகள் கலந்துரையாடலிலும் பங்கேற்கவுள்ளார்.

# இந்துக்களுக்கும் பௌத்தர்களுக்குமிடையே மோதலை ஏற்படுத்த ராஜபக்ஷ தரப்பு முயற்சி

## அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய இணைப்பாளர் வணபிதா சக்திவேல் தெரிவிப்பு

*கனகராசா சரவணன்*

இலங்கையில் மீண்டுமொரு குண்டொன்றை வெடிக்கச்செய்து இந்துக்களுக்கும் பௌத்தர்களுக்கும் இடையே மோதலை ஏற்படுத்த ராஜபக்ஷ தரப்பினர் முயற்சிக்கின்றனர். தமிழர்களை கடவுள்தான் காக்க வேண்டும் என்று தந்தை செல்லா அன்று சொன்னார்.அந்த கடவுள் இப்போது உண்மையை சனல் 4 மூலம் வெளிப்படுத்தியுள்ளது. எனவே கிழக்கு முன்னாள் முதலமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் பதவிவிலகி சுதந்திரமான விசாரணைக்கு இடம் கொடுக்க வேண்டும். அதுதான் ஒரு நீதியான செயலாக அமையும் என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய இணைப்பாளர் வணபிதா மா.சக்திவேல் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, கல்லடியிலுள்ள வொய்ஸ் ஒப் மீடியா ஊடக நிலையத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடக மாநாட்டின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,திலீபனின் 36 ஆவது நினைவேந்தல் வாரத்திலே இலங்கையின் அரசியல் நிலைமை, தமிழ் மக்களுடைய எதிர்பார்ப்பு, இவற்றுக்கு மத்தியில் சனல் 4 ஆவணப்படம் கொண்டுவந்துள்ள செய்தி இன்று முழுநாட்டையும் அச்சத்தில் ஆழ்த்தி இருக்கின்றது. இந்த நாட்டை ஆளுகின்றவர்கள் கொலைகாரர்கள் என்பதை வலியுறுத்தியுள்ளது.

1971 தெற்கில் இடம்பெற்ற கிளர்ச்சியின் போது நூற்றுக்கணக்கான இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டனர். அப்போது இளம் பெண் மனம்பேரி நிர்வாணமாக வீதியில் இழுத்துச் செல்லப்பட்டதாக கிளர்ச்சி வரலாறு கூறுகின்றது.

தெற்கில் 1988, 1989 ஆம் ஆண்டு களில் இடம்பெற்ற கிளர்ச்சிகளின் போது 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள் கொல்லப்பட்டனர். எனவே தங்களுடைய இனத்தை, மதத்தைச் சார்ந்தவர்களையே கொலை செய்கின்ற ஆட்சியாளர்கள் இப்போதும் ஆட்சி செய்து கொண்டிருக்கின்றார்கள் என்பதற்கான சான்றுதான் சனல் 4 வெளியிட்டுள்ள ஆவணப்படமாகும்.

2019 உயிர்த்த ஞாயிறு தினத் குண்டுவெடிப்புச் சம்பவமானது தங்களுடைய ஆட்சியை மீண்டும் நிலைநிறுத்துவதற்காக இனவாதத்தையும் மதவாதத்தையும் தூண்டி தங்களை பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ளமை சனல் 4 ஊடாக தெளிவாகிறது.



கொக்குதொடுவாய் மனித புதைகுழி, வடகிழக்கிலே நடந்த படுகொலைகள்,2009 முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை என்பன தெற்கு ஆட்சியாளர்களின் குரூர முகத்தை வெளிக்காட்டுகின்றது. எனவே தங்களுடைய மக்களையே கொன்று குவித்தவர்கள் வடகிழக்கு மக்களை என்ன செய்திருப்பார்கள் என்பதை சர்வதேசம் சிந்திக்க வேண்டும்.

சனல் 4 விவகாரத்தை விசாரிப்பதற்காக பாராளுமன்ற தெரிவுக்குழுவை அமைக்குமாறு தெற்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் கோருகின்றனர். அதேபோன்று ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டு விசாரணை செய்யப்படும் என ஜனாதிபதி தெரிவிக்கின்றார்.

1948 ஆம் ஆண்டிலிருந்து பல்வேறு விதமான ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆணைக்குழுக்கள் வழுங்கிய விசாரணை அறிக்கைகள் ஒன்றும் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை .

எனவே ஜனாதிபதி ஆணைக்குழுவாக இருந்தால் என்ன பாராளுமன்ற தெரிவுக்குழுவாக இருந்தால் என்ன இவை எல்லாம் உண்மையை மறைப்பதற்காக அமைக்கப்படுகின்ற குழுக்களாகும். மேற்குறித்த குழு குறித்து மக்களுக்கு நம்பிக்கை கிடையாது.

அரசாங்கம் மீது தற்போது பாரிய குற்றச்சாட்டு கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இதற்கு தீர்வு காண வேண்டுமென்றால் முதலில் பாராளுமன்றத்தை கலைத்து அத்தனைபேரும் அதிகாரமற்ற நிலைக்கு செல்ல வேண்டும். அதேநேரம் எதிர்க்கட்சியில் நிற்பவர்கள் இதனை பயன்படுத்தி ஆட்சிக்கு வந்தாலும் கொலையாளிகளை அவர்களும் பாதுகாக்கத்தான் போகின்றார்கள்.

இந்த கொலைகளை வைத்து அவர்கள் ஆட்சி நடத்தத்தான் போகின்றார்கள். அவர்களிடம் இருந்தும் நீதியை எதிர்பார்க்க முடியாது. காரணம் வடகிழக்கிலே இடம்பெற்ற இனவழிப்புக்கு அவர்களும் காரணமாக இருந்துள்ளனர். எனவேதான் சர்வதேச விசாரணை வேண்டும் என நாம் கோருகின்றோம்.

இப்போது இலங்கையை ஆளப் போவது யார், அடுத்த தேர்தல் வரும் போது மீண்டும் ராஜபக்ஷ தரப்பினர் குண்டை வெடிக்க வைக்கப் போகின்றார்கள். இனவாதத்தை ஏற்படுத்துவதற்கு வடகிழக்கு பகுதியிலே காவி உடைதரித்தவர்கள் களத்தில் இருக்கின்றனர். இந்நிலையில் இந்துக்களுக்கும் பௌத்தர்களுக்கும் இடையே மோதலை ஏற்படுத்த ராஜபக்ஷ தரப்பினர் முயற்சிக்கின்றனர் .

எனவே தெற்கு மக்கள் வடகிழக்கு மக்களின் குரலுக்கு செவிமடுக்க வேண்டும். அவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ள வேண்டும்.சர்வதேச நீதி விசாரணைக்கு ஆதரவு வழங்க வேண்டும். இல்லை என்றால் மீண்டும் உங்களை கொலையாளிகளே ஆளுவார்கள் . எனவே இவற்றுக்கெல்லாம் சர்வதேச விசாரனை வேண்டும்.அப்படி செய்தால் மாத்திரமே வடகிழக்கு மக்களுக்கும் தெற்கில் இருக்கின்ற நீதிகேட்கும் மக்களுக்கும் நீதிகிடைக்கும் என்றார்.

# சட்டவிரோதமான முறையில் தொழிலுக்காக வெளிநாடு செல்வோரின் எண்ணிக்கை அதிகரிப்பு

சட்ட விரோதமான முறையில் தொழிலுக்காக வெளிநாடு செல்வோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், இந்த எண்ணிக்கையில் அதிகரிப்பு காணப்படுவதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் அவ்வாறான 2500 வரையான சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பிரதிப் பொது முகாமையாளர் காமினி செனவிரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

சட்ட விரோதமான முறையில் தொழிலுக்காக வெளிநாடு செல்வோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், இந்த எண்ணிக்கையில் அதிகரிப்பு காணப்படுகிறது. அதற்கமைவாக இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் அவ்வாறான 2500 வரையான சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

கடந்த வருடத்தில் குறித்த எண்ணிக்கை 1900ஆக காணப்பட்டது.

மேலும், அனுமதிப்பத்திரமின்றி வெளிநாட்டுக்கு பணியாளர்களை அனுப்பியமை தொடர்பிலும் தனிநபராக அல்லது குழுவாக வெளிநாட்டுத் தொழிலுக்கு அனுப்புவதாக தெரிவித்து பண மோசடியில் ஈடுபட்டமை தொடர்பிலும் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 100 பேர் வரை கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களுள் தனிநபர்களாக, குழுக்களாக செயற்பட்ட 90 பேரும் அனுமதிப்பத்திரம் இன்றி வெளிநாட்டுக்குப் பணியாளர்களை அனுப்புவதற்கு முற்பட்ட 9 நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அனுமதிப்பத்திரத்தை பெற்றுத் தவறாக செயற்பட்ட நிறுவனமொன்றின் உரிமையாளரும் அதில் அடங்குகிறார். இந்நிலையில் சட்ட விரோதமாக வெளிநாடு செல்வதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

# ஹரக் கட்டாவின் தாய்-மைத்துனர் கைது!

திட்டமிட்ட குற்றக் கும்பல் உறுப்பினர் நதுன் சிந்தக விக்ரமரத்ன எனப்படும் ஹரக் கட்டாவை தடுப்புக் காவலிலிருந்து தப்பிக்க வைக்க முயற்சிசெய்து தற்போது தலைமறைவாகியுள்ள பொலிஸ் கான்ஸ்டபிளின் தாய் மற்றும் அவரது மைத்துனர் ஆகியோர் விசேட பொலிஸ் குழுவினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எனினும், கைதான பெண் திடீர் சுகயீனம் காரணமாக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

மேலும், ஹரக் கட்டாவுக்கு நேரடியாக உதவியதாகக் கூறப்படும் மற்றுமொரு பொலிஸ் கான்ஸ்டபிள் விரைவில் கைது செய்யப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த இரண்டு கான்ஸ்டபிள்களைத் தவிர, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் உயர் அதிகாரிகள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் ஹரக் கட்டாவின் தப்பிக்கும் சதித்திட்டத்தின் திரைக்குப் பின்னால் இருப்பதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

குறித்த கான்ஸ்டபிள்களில் ஒருவர் வெளிநாட்டுக்கு தப்பிச் சென்றதாகக் காட்ட முயற்சித்த போதிலும் அவர் இன்னும் நாட்டிலேயே இருப்பதாக பொலிஸ் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.



## ஆசியக் கிண்ணம்...

முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய இலங்கை அணிக்கு அதிர்ச்சி காத்திருந்தது. தொடர்ந்து 4வது ஓவரில் மொஹமட் சிராஜ் 4 விக்கெட்களை வீழ்த்த இலங்கை அணி நிலைகுலைந்து போனது. குசல் மெண்டிஸ் மாத்திரம் அதிகபட்சமாக 17 ஓட்டங்களை குவிக்க, இந்தியாவின் வேகப்பந்துவீச்சில் தடுமாறிய இலங்கை அணி 15.2 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து வெறும் 50 ஓட்டங்களுக்குள் சுருண்டு கிரிக்கெட் வரலாற்றில் மோசமான சாதனை படைத்தது.

ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் வரலாற்றில் இலங்கை அணி பதிவு செய்த இரண்டாவது குறைவான ஓட்ட எண்ணிக்கை 11 ஆண்டுகளின் பின் நேற்றைய ஆட்டத்தில் பதிவு செய்யப்பட்டது. மேலும் இந்திய அணியுடன் பதிவான குறைந்த ஓட்ட எண்ணிக்கையாகவும் இந்திய அணி குறைந்த ஓட்டங்களுக்கு எதிரணியைக் கட்டுப்படுத்திய சந்தர்ப்பமாகவும் இது பதிவானது.

கிரிக்கெட் வரலாற்றில் டெஸ்ட் கிரிக்கெட் ஆடும் அணிகளிலேயே படுமோசமான சாதனையையும் இலங்கை படைத்தது. ஒருநாள் கிரிக்கெட்டில் முதல் 5 விக்கெட்களை குறைந்த ஓட்டங்களுக்கு இழந்த அணிகளின் பட்டியலில் இரண்டாம் இடத்தை பிடித்தது. மேலும், 6 விக்கெட்டுக்கு மிகக் குறைந்த ஓட்டங்களை எடுத்த அணிகளின் பட்டியலில் கனடாவுக்கு பின் 12 ஓட்டங்கள் எடுத்து இரண்டாம் இடத்தை பிடித்தது.

இந்திய அணியில் அபாரமாக பந்துவீசிய மொஹமட் சிராஜ் 7 ஓவர்களில் 21 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்களை வீழ்த்தினார். ஒருநாள் கிரிக்கெட்டில் ஒரே ஓவரில் 4 விக்கெட்டுகளை வீழ்த்திய முதல் இந்திய வீரர் என்ற சாதனையை படைத்த சிராஜ், 6வது ஓவரில் 5வது விக்கெட்டை வீழ்த்தி குறைந்த பந்துகளில் (16) 5 விக்கெட்டுகள் வீழ்த்திய வீரர் என்ற இலங்கையின் சமிந்த வாஸின் சாதனையையும் சமன் செய்தார்.

51 என்ற இலகுவான வெற்றியிலக்கை நோக்கி பதிலெடுத்தாடிய இந்திய அணி 6.1 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி சம்பியன் பட்டம் வென்றது. போட்டியின் ஆட்டநாயகனாக மொஹமட் சிராஜ் தெரிவாக, தொடர் ஆட்டநாயகனாக இந்தியாவின் குல்தீப் யாதவ் தெரிவானார்.

# ஊழியர்களுக்கு கட்டாய ஓய்வு

## சதொச அதிரடி தீர்மானம்!

சுமார் 300 ஊழியர்களை கட்டாய ஓய்வில் அனுப்ப, கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனத்தின் (சதொச) பணிப்பாளர் சபை தீர்மானித்துள்ளது.

இந்த கூட்டுத்தாபனத்தின் மறுசீரமைப்பின் நடவடிக்கையின் கீழ் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, பொது முகாமையாளர், முகாமையாளர், களஞ்சிய முகாமையாளர், கணக்காளர், உதவி கணக்காளர், மேற்பார்வையாளர் (பொறியியல்), சாரதி உள்ளிட்ட பல்வேறு பதவிகளில் உள்ள 292 பேருக்கு இவ்வாறு கட்டாய ஓய்வு வழங்கப்படவுள்ளது.

இது தொடர்பில் வர்த்தகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோவினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதன்படி இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கட்டாய ஓய்வூதியத் திட்டத்தின்படி, அனைத்து ஊழியர்களுக்கும் எதிர்வரும் 30 ஆம் திகதி முதல் மாதாந்த சம்பளம் அல்லது வேறு எந்த கொடுப்பனவும் வழங்கப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கை சதொச நிறுவனத்தின் தலைவர் பசந்த யாப்பா அபேவர்தனவினால் வெளியிடப்பட்டுள்ளது.

அமைச்சரவையின் அங்கீகாரத்தின் பிரகாரம் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் குழு, கட்டாய ஓய்வில் அனுப்பப்படும் அனைத்து சதொச ஊழியர்களுக்குமான இழப்பீட்டு சூத்திரத்தை தயாரித்துள்ளது.நிறுவனத்துக்கு ஊழியர்கள் செலுத்த வேண்டிய கடனையும் செலுத்த வேண்டிய பணத்தையும் கழித்துவிட்டு மீதமுள்ள பணம் இழப்பீட்டு முறையின்படி வழங்கப்படும் என அந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த கட்டாய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகையுடன், ஊழியர் சேமலாப நிதி மற்றும் நம்பிக்கை நிதி ஆகியவற்றின் சட்டபூர்வ பலன்களைப் பெற ஊழியர்களுக்கு உரிமை உண்டு என அந்த சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அமைச்சின் தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து அடுத்த வாரம் முதல் தொழிற்சங்க ரீதியாகவும் சட்ட ரீதியாகவும் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக கட்டாய ஓய்வின் கீழ் அனுப்பப்படவுள்ள ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

# திருத்தப்பட்ட பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் வர்த்தமானியில் வெளியீடு

திருத்தப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் வர்த்தமானியில் வெளியிடப் பட்டுள்ளது.

தற்போது நடைமுறையிலுள்ள 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கி, அதற்கு பதிலாக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இது தொடர்பில் தயாரிக்கப்பட்ட சட்டமூலத்தை வர்த்தமானியில் வெளியிடுவதற்கு கடந்த பெப்ரவரி 27ஆம் திகதி அமைச்சரவை அனுமதி வழங்கியது.

அதற்கமைய, கடந்த மார்ச் மாதம் 22ஆம் திகதி, பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

எனினும், இந்த சட்டமூலத்தில் அடங்கியுள்ள சில சரத்துக்கள் தொடர்பில் பல தரப்பினர் எதிர்ப்புத் தெரிவித்ததையடுத்து, அதனை திருத்தியமைக்க அரசாங்கம் தீர்மானித்தது.

அதன்படி பெறப்பட்ட ஆலோசனைகள் மற்றும் கருத்துக்களின் அடிப்படையில் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது

## யாழ். பல்கலைக்கழக...

கிளிநொச்சி, கோணாவில் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவியான வசந்தகுமார் டலக்சியா என்ற மாணவியே வீட்டில் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

வீட்டில் தூக்கிட்டு இருந்த நிலையில் சகோதரனால் மீட்கப்பட்டு கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் அவர் இறந்துள்ளார்.

சடலம் மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது .மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## அதிக விளைச்சலைத்...

பயிரிடுவதற்கு ஏற்றது எனவும் அவர்களின் முயற்சிகள் மிகவும் வெற்றியடைந்துள்ளதாகவும் ஆய்வுக் குழு தெரிவித்துள்ளது.

அதிக விளைச்சல் மற்றும் மிகவும் இனிப்புடன் கூடிய இவ்விரு இரகங்களும் அடுத்த சில மாதங்களில் இலங்கையில் அறிமுகம் செய்யப்பட வுள்ளன.

இந்தியா மற்றும் பிற நாடுகளில் இருந்து பெருமளவான மாதுளை மற்றும் விதைகள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுகின்றன. இதனால், ஆண்டுதோறும் பெருமளவு அந்நியச் செலாவணியை அரசு இழக்கிறது. இந்நிலைமையை தவிர்க்கும் நோக்கில் விவசாயத் திணைக்களத்தினால் இரண்டு புதிய மாதுளை இரகங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

உலர் வலயங்களில் பயிரிடக்கூடிய இந்த இரண்டு புதிய இரகங்களும் தற்போது நுரைச்சோலை மற்றும் வீரவில விவசாய ஆராய்ச்சிப் பண்ணைகளில் பயிரிடப்பட்டு வெற்றியடைந்துள்ளன. இலங்கையில் வெற்றிகரமாக பயிரிடக்கூடிய அதிக விளைச்சளைத் தரும் இரண்டு புதிய வகை மாதுளை வகைகளை விவசாயத் திணைக்களம் ஆராய்ச்சியொன்றில் கண்டறிந்துள்ளது.

## புதிய பணியாளர்கள்...

நடத்துநர்கள் 381 பேரை புதிதாக சேவையில் இணைத்துக்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் லலித் டி அல்விஸ் தெரிவித்தார்.

சாரதிகள் 912 பேரையும் புதிதாக சேவையில் இணைத்துக்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

## மாளிகாகந்த...

கொட்டாஞ்சேனை பிரதேசத்தில் கூரிய ஆயுதங்களால் நபர் ஒருவரை கொலை செய்த சம்பவமொன்றில் சந்தேகநபரான காயமடைந்தவர், துப்பாக்கிச் சூடு இடம்பெற்றபோது, தனது மனைவி மற்றும் மகளுடன் முச்சக்கரவண்டியில் பயணித்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கொட்டாஞ்சேனை, வாசல வீதியை சேர்ந்த ஆசீர்வாதினி அபிமானி என்ற சிறுமியே சம்பவத்தில் உயிரிழந்தார்.

## திருமலையில்...

முதலில் முகத்தை கருப்புத்துணியால் கட்டிய சிங்கள காடையன் ஒருவன், பெரிய கல்லினால் வாகனத்தை தாக்கியுள்ளான்.

தொடர்ந்து வாகனம் முன்னேறிய நிலையில், வீதியின் குறுக்கே தடைகளை ஏற்படுத்தி காத்திருந்த, ஆண்களும் பெண்களும் நிறைந்திருந்த கூட்டம், வாகனத்தை சுற்றிவளைத்து, கொட்டன்களால் அடித்து தாக்கினர். வாகனத்தில் இருந்தவர்களையும் கண்மூடித்தனமாகத் தாக்கினர்.

அங்கு கடமையிலிருந்த பொலிஸாரால் நிலைமையைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

இந்த கொலைவெறித் தாக்குதலில் இருந்து தப்பித்து, ஊர்தியை திருப்பி அருகிலுள்ள தம்பலகாமம் பகுதிக்கு கொண்டு சென்றுள்ளனர். தொடர்ந்து பயணிக்க முடியாத நிலையில், அங்கேயே தங்கியுள்ளனர்.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், சட்டத்தரணி ந.காண்டீபன் ஆகியோரும் கடுமையாக தாக்கப்பட்டனர்.

இந்த ஊர்திப் பவனிக்கு நேற்று முன்தினமும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது. ஒரு குழுவினர் மட்டக்களப்பு, மொறக்கொட்டாஞ்சேனை இராணுவமுகாமுக்கு அருகாமையில் நின்று சிங்கக் கொடிகளை ஏந்தியவாறு வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்கள். அதனைக் கடந்து சென்றபோது வாழைச்சேனை சந்திக்கு அண்மையில் நின்ற ஒரு குழுவினர் பனர்கள்,போஸ்டர்களைத் தாங்கியவாறு மாலை 6.30 மணியளவில் வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்கள்.

அவ்விடத்தைக்கடந்து ஊர்தி பயணித்துக் கொண்டிருந்தபோது அதே குழுவினர் பட்டாரக வாகனமொன்றில் ஏறி ஊர்தியை முந்திச் சென்று நாவலடியிலுள்ள பொலநறுவை- வாகரை – மட்டக்களப்பு சந்தியில் இறங்கி வீதிக்குக் குறுக்காக பனர்கள், போஸ்டர்களை பிடித்தவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# உலகளாவிய குற்றவியல் நீதிக்கான தூதுவருடன் சுமந்திரன் சந்திப்பு



பாராளுமன்ற உறுப்பினர், ஜனாதிபதி சட்டத்தரணிஎம்.ஏ.சுமந்திரனுக்கும் அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் உலகளாவிய குற்றவியல் நீதிக்கான தூதுவர் Beth Van Schaack-இற்கும் இடையிலான சந்திப்பொன்று வொஷிங்டனில் வெள்ளிக்கிழமை (15) நடைபெற்றுள்ளது.

அமெரிக்காவில் முக்கிய உயர்மட்ட சந்திப்புகளில் ஈடுபட்டுவரும் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் உலகளாவிய குற்றவியல் நீதிக்கான தூதுவர் Beth Van Schaack-ஐயும் சந்தித்துள்ளார்.

இந்த கலந்துரையாடல் மிக முக்கியமானதும் பயனுடையதுமாக இருந்ததாக சுமந்திரன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

இந்த சந்திப்பின்போது உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல் மற்றும் உள்நாட்டு யுத்தத்தின்போது இலங்கையில் இடம்பெற்ற சர்வதேச குற்றங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா பிரதிநிதிகளுடன் சந்திப்பு



இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் தரப்பில் விடுக்கப்பட்ட வேண்டுகோளின் அடிப்படையில் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் பிரதிநிதிகளுக்கும் அந்நாட்டு தூதுவர் ஜூலி சங்கிற்குமிடையில் சிநேகபூர்வ சந்திப்பொன்று ஜம்இய்யாவின் தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற்றது.

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் கொள்கைகள், குறிக்கோள்கள், சமூகம் தொடர்பிலான பணிகள், தேசியம் மற்றும் சர்வதேசம் சார்ந்த முன்னெடுப்புகள் நல்லுறவுகள் பற்றிய அறிமுகங்கள் இந்த சந்திப்பின்போது அமெரிக்க தூதுவருக்கு வழங்கப்பட்டன.

குறித்த நிகழ்வில் ஜம்இய்யாவின் தலைவர் ரிஸ்வி கடந்த காலங்களில் சமூகம் மற்றும் தேசியம் சார்ந்து ஜம்இய்யா எவ்வாறான பணிகளை செயற்பாடுகளை செய்திருக்கிறது என்பது பற்றிய தெளிவுகளை வழங்கியதோடு கலந்துகொண்டிருந்த நிறைவேற்றுக்குழு உறுப்பினர்களும் தெளிவுகளை வழங்கினர்.

இந்த சந்திப்பின்போது கருத்துத் தெரிவித்த அமெரிக்க தூதுவர் ஜூலி சங்,

அகிலஜம்இய்யத்துல் உலமா சமூகம் தொடர்பில் மேற்கொள்ளும் முன்னெடுப்புகள், பணிகளை தான் மதிப்பதாக தெரிவித்ததோடு மனித நேயப் பணி, நல்லிணக்கம் ஆகியவற்றுக்காக ஒன்றாக செயற்பட வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டினார்.

இந்நிகழ்வில் அமெரிக்கத் தூதரகம் சார்பில் அந்நாட்டு தூதுவர் ஜூலி சங் மற்றும் அவரது பிரதிநிதிகளான நஸ்ரின் மரிக்கார் ரூபி வூட்சைட் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# ஊடகரின் தாயார் காலமானார்



'தமிழன்' பத்திரிகை உட்பட ஏனைய தேசிய அச்சு ஊடகங்கள் மற்றும் இலத்திரனியல் ஊடகங்களின் இரத்தினபுரி மாவட்ட செய்தியாளரும் சப்ரகமுவ மாகாண சபை ஊடகப் பிரிவின் தமிழ்ப் பிரிவு பொறுப்பதிகாரியுமான சிவா ஸ்ரீதரராவின் தாயார் எஸ்.கோகிலாதேவி சனிக்கிழமை(16) காலமானார்.

இவர், பிரபல ஜோதிட மற்றும் வாஸ்து ஆய்வாளர் சிவா பாஸ்கரராவ், இரத்தினபுரி புஸ்ஸல்ல மெனரிபிட்டிய கல்வி முகாமைத்துவ பயிற்சி நிலையத்தின் இணைப்பாளர் பிரபாகரராவ், இரத்தினபுரி தமிழ் மகா வித்தியாலய ஆரம்பப்பிரிவு ஆசிரியை சிரேஷ்டவேணி ஆகியோரின் தாயாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் கஹவத்தை, தலுக்கலையில் அமைந்துள்ள இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளதுடன் இன்று 18ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 03 மணியளவில் இறுதிக் கிரியைகள் இடம்பெற்று 05 மணியளவில் பெல்மதுளை தகனசாலையில் தகனம் செய்யப்படும். **தொடர்புகளுக்கு: 076-0554380, 072-2456363**



கிராண்ட்பாஸ் நவகம்புர 1, அருள்மிகு ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலய தேர்த் திருவிழா ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ செ.தினவர்தன் தினேஷ் சர்மா தலைமையில் சனிக்கிழமை(16) நடைபெற்றது. இதன்போது ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க மற்றும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மனோகணேசன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். **படங்கள்:** எம்.நசார்

## போக்குவரத்து திணைக்கள மோசடி: அரசுக்கு 15 கோடி ரூபா இழப்பு

இலங்கையில் உள்ள வெளிநாட்டு இராஜதந்திர அதிகாரிகளின் இரத்துச் செய்யப்பட்ட வாகன இலக்கங்களில் வேறு சொகுசு வாகனங்களைப் பதிவுசெய்து மோட்டார் போக்குவரத்து திணைக்கள அதிகாரிகள் சிலர் நீண்டகாலமாக மோசடியில் ஈடுபட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இது குறித்து கணக்காய்வு அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இந்த மோசடியால் அரசுக்கு சுமார் 15 கோடி ரூபா வரி வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையிலுள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகள் அரச அனுசரணையின் கீழ் வரி விலக்குடன் இறக்குமதி செய்து, மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவுசெய்த மோட்டார் வாகனங்களின் பதிவுகளில், வேறு சில சொகுசு வாகனங்களின் அடிச்சட்ட இலக்கம் மற்றும் இயந்திர இலக்கங்களை உள்ளீடு செய்து, வேறு நபர்களின் பெயரில் பதிவுச் சான்றிதழ்கள் வழங்கியுள்ளமை தெரியவந்துள்ளது.

இதன்மூலம் கடந்த வருடங்களில் பதிவுசெய்யப்பட்ட தூதரக அதிகாரிகளின் 06 வாகனங்கள் மீண்டும் ஏற்றுமதி செய்யப்பட்டு பதிவுகளை இரத்துச் செய்துவிட்டு மற்ற சொகுசு வாகனங்களின் அடிச்சட்ட இலக்கங்கள், இயந்திர இலக்கங்களை உள்ளீடு செய்து பதிவுச் சான்றிதழ்கள் பெற்றுள்ளமை கணக்காய்வு அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

# தடுப்பிலிருந்து ஹரக் கட்டா தப்பிக்க முயற்சி: உதவி பொலிஸ் அத்தியட்சகர் இடமாற்றம்

சி.ஐ.டியுடன் இணைக்கப்பட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் (ஏ.எஸ்.பி.) ஒருவரை பொலிஸ்மா அதிபர் உடனடியாக இடமாற்றம் செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சி.ஐ.டி. தடுப்புக் காவலிலிருக்கும் 'ஹரக் கட்டா' என அழைக்கப்படும் நதுன் சிந்தக விக்கிரமரத்னவின் தப்பிக்கும் முயற்சிக்கு அவர் உதவியிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகத்துக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

குற்றப் புலனாய்வுப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களை இரவு நேரம் சென்று பார்வையிட்ட குறிப்பிட்ட ஏ.எஸ்.பி., ஹரக் கட்டா வழக்கு தொடர்பான விடயங்களை பல சந்தர்ப்பங்களில் விவாதித்ததாக தெரியவந்தது.

மேலும், ஹரக் கட்டா தொடர்பான வழக்கை தன்னிடம் ஒப்படைக்குமாறு சி.ஐ.டி. உயர் அதிகாரிகளிடம் இவர் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

இந்த காரணங்களால் அவர் சி.ஐ.டியிலிருந்து மாற்றப்பட்டதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# கோப், கோபா குழுக்களுக்கு முதன்முறையாக மில்கோ நிறுவனத்தை அழைக்கத் தீர்மானம்

அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (கோப்) அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் (கோபா) முன்னிலையில் முதன்முறையாக மில்கோ நிறுவனத்தை அழைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கோப் மற்றும் கோபா குழுவுக்கு இதுவரை பல அரச நிறுவனங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ள நிலையில், இம்முறை முதல் முறையாக மில்கோ நிறுவனத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

மில்கோ நிறுவனத்தின் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடனான சந்திப்பின்போது மில்கோ நிறுவனத்தை கோப் மற்றும் கோபா குழுவுக்கு அழைப்பது தொடர்பில் தீர்மானம் எட்டப்பட்டதாக அவர் கூறுகிறார்.

இதன்போது குறித்த நிறுவனத்தில் இடம்பெற்றுள்ள பல முறைகேடுகளை சுட்டிக்காட்டிய தொழிற்சங்க பிரதிநிதிகள், தொடரும் மோசடி மற்றும் ஊழலால் நிறுவனம் தொடர்ந்து நஷ்டத்தை சந்தித்து வருவதாகவும் தெரிவித்தனர்.

மில்கோ மற்றும் தேசிய கால்நடை அபிவிருத்தி சபையை மறுசீரமைப்பது குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டதாக அமைச்சர் மஹிந்த அமரவீர மேலும் தெரிவித்தார்.

# அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு விருது

அட்டாளைச்சேனை மத்திய நிருபர்

தேசிய ரீதியில் தாய் மற்றும் குழந்தை பராமரிப்பு தர மதிப்பீடுகளில் மிகச்சிறப்பான செயற்திறனுக்கான அங்கீகார விருது மற்றும் நோயாளி பாதுகாப்பு கருதி தீவிர சிகிச்சை பிரிவுக்கான சிறப்பு சான்றிதழ் என்பவற்றை அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை பெற்றுக் கொண்டது.

சுகாதார அமைச்சினால் உலக நோயாளி பாதுகாப்பு தினத்தையொட்டி "நோயாளர்களின் பாதுகாப்புக்காக நோயாளர்களை ஈடுபடுத்துதல்" எனும் தொனிப்பொருளில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் அசேல குணவர்த்தன தலைமையில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் சனிக்கிழமை (16) நடைபெற்றது. இதன்போதே மேற்குறித்த விருதும் சான்றிதழும் வழங்கி வைக்கப்பட்டன.



இந்நிகழ்வில் சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் லால் பனாப்பிட்டிய, தாய், குழந்தை சுகாதார மற்றும் குடும்ப நல பணிப்பாளர் சித்ராமாலி, சுகாதார தர பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு பணிப்பாளர் டிவானி ரணவீர ஆகியோர் கலந்து கொண்டு நினைவுச் சின்னம், சான்றிதழ்கள் என்பவற்றை வழங்கினர்.

இந்நிகழ்வில் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை சார்பாக வைத்திய அத்தியட்சகர் ரீ.எஸ்.ஆர்.ரீ.ஆர்.றஜாப், சுகாதார தர பாதுகாப்பு பதில் பொறுப்பு வைத்தியர் எம்.எச்.எம்.சனூபர் மற்றும் அனைத்து தர சுகாதார உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.


# வாகன ஏலவிற்பனை — கொட்டாவ

| வாகன இல. | தயாரிப்பு | மாதிரி | வாகன இல | தயாரிப்பு | மாதிரி |
|---|---|---|---|---|---|
| WP BIV 04xx | BAJAJ | CT 100 | WP BAX 78xx | HONDA | DIO |
| WP BFW 22xx | BAJAJ | PULSAR 160 | CP BIE-79xx | HONDA | GRAZIA |
| WP BDO 31xx | BAJAJ | CT 100 | WP BDL 79xx | HONDA | DIO |
| WP BGX 33xx | BAJAJ | CT 100 | WP BHW-82xx | HONDA | DIO |
| SG BAK 35xx | BAJAJ | PULSAR 150 | SP BEC-89xx | HONDA | DIO |
| NC BBQ 36xx | BAJAJ | PLATINA | WP BGR 91xx | HONDA | DIO |
| WP BDX 44xx | BAJAJ | CT 100 | WP BAV 91xx | HONDA | DIO |
| WP BDT-51xx | BAJAJ | CT 100 | NW BIO 92xx | HONDA | DIO |
| WP BAW 56xx | BAJAJ | PULSAR | WP BGS 92xx | HONDA | DIO |
| WP BHE-67xx | BAJAJ | CT 100 | WP BFL-93xx | HONDA | DIO |
| CP BCJ 84xx | BAJAJ | PLATINA | NW BHQ 94xx | HONDA | DIO |
| WP BCV 84xx | BAJAJ | DISCOVER 125 | SP BDL-95xx | HONDA | DIO |
| SP BGW-60xx | BAJAJ | PLATINA | WP BDH 97xx | HONDA | DIO |
| WP BCJ 80xx | BAJAJ | CT 100 | WP BAJ-98xx | HONDA | DIO |
| SP BDY-26xx | BAJAJ | PULSAR | UP BGO 99xx | HONDA | DIO |
| SP BGI 22xx | BAJAJ | PLATINA | UP BFU-09xx | HONDA | DIO |
| SP BCT 91xx | BAJAJ | PULSAR | SP BFY-27xx | HONDA | DIO |
| SP BFS-00xx | HONDA | DIO | SP BGT-37xx | HONDA | DIO |
| SPBHM04xx | HONDA | DIO | SP BHW-12xx | HONDA | DIO |
| WP BGN 08xx | HONDA | DIO | SP BGS-04xx | HONDA | DIO |
| WP BIN 09xx | HONDA | DIO | SP BGT-53xx | HONDA | DIO |
| WP BIZ 16xx | HONDA | DIO | SP BIQ-88xx | HONDA | DIO |
| WP BEU 18xx | HONDA | DIO | SP BCQ-89xx | HONDA | DIO |
| WP BFL 20xx | HONDA | DIO | SP BHZ-99xx | HONDA | DIO |
| WP BJA 20xx | HONDA | DIO | SP BCL-53xx | HONDA | DIO |
| WP BHY 22xx | HONDA | HORNET | SP BEG 43xx | HONDA | DIO |
| WP BED 23xx | HONDA | DIO | SP BFJ-04xx | HONDA | DIO |
| SPBHX23xx | HONDA | DIO | SP BFC 82xx | HONDA | DIO |
| NW BDS 25xx | HONDA | DIO | SP BEH-93xx | HONDA | DIO |
| WP BFG 26xx | HONDA | DIO | SP BGX-77xx | HONDA | DIO |
| WP BIJ 26xx | HONDA | DIO | SP BAN-93xx | HONDA | DIO |
| WP BFK 28xx | HONDA | DIO | NW BFR-02xx | YAMAHA | RAY ZR |
| WP BHU-29xx | HONDA | DIO | WP BHN-08xx | YAMAHA | RAY ZR |
| WP BIN-32xx | HONDA | DIO | UP BFV 08xx | YAMAHA | RAY ZR |
| WP BFY-33xx | HONDA | DIO | WP BIA 20xx | YAMAHA | RAY ZR |
| NW BGV 34xx | HONDA | DIO | SP BGT-21xx | YAMAHA | FZ VERSION 02.00 |
| NW BGB 35xx | HONDA | DIO | SP BEL-21xx | YAMAHA | RAY ZR |
| UP BFU 36xx | HONDA | DIO | WP BFC 26xx | YAMAHA | FZ |
| WP BEL 37xx | HONDA | DIO | WP BCG 32xx | YAMAHA | FZ |
| WP BGR 38xx | HONDA | DIO | WP BGM-42xx | YAMAHA | RAY ZR |
| WP BEP 40xx | HONDA | DIO | NC BDS 41xx | YAMAHA | FZ S |
| WP BFF 40xx | HONDA | DIO | WP BDL 46xx | YAMAHA | FZ S |
| WP BES-41xx | HONDA | DIO | WP BFA 48xx | YAMAHA | FZ VERSION 02.00 |
| WP BDW 45xx | HONDA | DIO | CP BDZ 53xx | YAMAHA | FZ |
| NW BGT 46xx | HONDA | DIO | WP BDX 58xx | YAMAHA | FZ |
| WP BDI 50xx | HONDA | DIO | NW BFE 77xx | YAMAHA | FZ |
| WP BEB 51xx | HONDA | DIO | WP BET 81xx | YAMAHA | FZ |
| CP BCC 53xx | HONDA | DIO | WP BIM 82xx | YAMAHA | RAY ZR |
| WP BHY 57xx | HONDA | DIO | UP BFR 85xx | YAMAHA | RAY ZR |
| WP BGW 58xx | HONDA | DIO | WP BIJ-88xx | YAMAHA | MT 15 |
| WP BDX 58xx | HONDA | DIO | SG BHI 90xx | YAMAHA | FZ |
| WP BIM 59xx | HONDA | DIO | SP BFD-92xx | YAMAHA | FZ |
| WP BEN 59xx | HONDA | DIO | WP BGM 96xx | YAMAHA | FZ |
| WP BEK 60xx | HONDA | DIO | WP BFT 99xx | YAMAHA | FZ |
| WP BII 60xx | HONDA | DIO | SP BGY-68xx | YAMAHA | RAY ZR |
| SP BHN-61xx | HONDA | DIO | WP BHK 70xx | YAMAHA | FZ |
| EP BIM 62xx | HONDA | DIO | WP BIG 72xx | YAMAHA | RAY ZR |
| WP BHF 63xx | HONDA | DIO | SP BHD-14xx | TVS | NTORQ |
| WP BFF-64xx | HONDA | DIO | WP BIW-96xx | TVS | NTORQ |
| NW BGP 65xx | HONDA | DIO | WP BIK 24xx | TVS | NTORQ |
| WP BGJ 66xx | HONDA | DIO | NW BHJ-36xx | TVS | NTORQ |
| SP BEX-66xx | HONDA | DIO | WP BFI - 41xx | TVS | XL SUPER HEAVY DUTY |
| WP BFZ-67xx | HONDA | DIO | WP QG-54xx | BAJAJ | 2stroke |
| WP BFS-68xx | HONDA | DIO | WP ABH-05xx | BAJAJ | 4stroke |
| WP BGK 68xx | HONDA | GRAZIA | NW QD-00xx | BAJAJ | 4stroke |
| SP BCQ-69xx | HONDA | DIO | WP ABE 09xx | BAJAJ | 4stroke |
| UP BHR 74xx | HONDA | DIO | WP AAQ-14xx | BAJAJ | 4stroke |
| SG BEL 74xx | HONDA | DIO | WP QQ 27xx | BAJAJ | 4stroke |
| WP BHD-33xx | HONDA | GRAZIA | WP QQ 79xx | BAJAJ | 4stroke |
| WP BID 33xx | HONDA | GRAZIA | WP BCJ 86xx | BAJAJ | 4stroke |
| WP BGP 74xx | HONDA | DIO | WP QM 93xx | BAJAJ | 4stroke |
| WP BED 75xx | HONDA | DIO | CP QL-94xx | BAJAJ | 4stroke |
| WP BDF 75xx | HONDA | DIO | CP KG 73xx | CHEVROLET | AV-EO |
| UP BGS 75xx | HONDA | DIO | 300-60xx | FORD | LASER |
| WP BIK 76xx | HONDA | DIO | WP ZB-17xx | JCB | 3CX |

**2023 செப்டெம்பர் 17முதல்18 வரை (காலை 8.30 முதல் 4.30 வரை)**
**இலக்கம்.17/1, பின்ஹேன சந்தி, ஹொரண வீதி, கொட்டாவையில் அமைந்துள்ள எமது நிறுவன வாகன வளாகத்தில் பார்வையிடலாம்**

**விற்பனை திகதி: 19—09—2023|காலை10.30 மணிக்கு**

வாகன சந்தையிலிருந்து எந்தவொரு வாகனத்தையும் முன்னறிவித்தலின்றி அகற்றுவதற்கு நிறுவன முகாமைத்துவத்துக்கு அதிகாரம் உண்டு.

**விஸ்வா:— 0774787096 சுஜீவ:—0712591067**

**துரித அழைப்பு:—0117308080 வட்ஸ்அப்:—0710356125**

ANA AUCTIONEER
Black Tie Service with True Aloha!
ඒ එන් අල්ගෙවත්ත ඕක්ෂනියර්(ර්)
A N ALGEWATHTHA AUCTIONEER
#333, Janajaya City, Rajagiriya.
+94 71 790 5 790 | info@anaauctioneer.com
www.anaauctioneer.com

AMF
அசோசியேட், மோட்டர்ஸ் பைனேன்ஸ் கம்பனி பிஎல்சி.
தலைமை அலுவலகம்,
146, ஹெவ்லொக் வீதி, திம்பிரிகஸ்யாய
தொலைபேசி: 011-5553663

# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2023 செப்டெம்பர் 18ஆம் திகதி, திங்கட்கிழமை


# சமூக ஊடகங்களை கட்டுப்படுத்தல்!

சமூக வலைத்தளங்களில் நிர்வாண புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை பரப்புவோருக்கு கடுமையான தண்டனை விதிக்கும் வகையில் புதிய சட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

அந்தச் சட்டங்கள், காதல் உறவுகளின் போது எடுக்கப்படும் தனிப்பட்ட மற்றும் நிர்வாண புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை உறவு முறிந்த பிறகு அவர்களைத் துன்புறுத்தும் நோக்கத்துடன், மற்றவர்கள் அவற்றைப் பார்க்கும் வகையில் வெளியிடுவதை தடுக்கும் நோக்கத்துடன் தயாரிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான சட்டங்கள் அடங்கிய சட்டமூலம் தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனை பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் சமர்ப்பித்தார். இதன்படி, முதன்முறையாக இதுபோன்ற குற்றத்துக்காக பிடிபடும் நபருக்கு ஐந்து ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை அல்லது ஐந்து லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்படலாம்.

மேலும், இதுபோன்ற குற்றத்தில் இரண்டாவது முறை அல்லது மீண்டும் மீண்டும் பிடிபடும் நபருக்கு உரிய தண்டனை அல்லது அபராதம் இரட்டிப்பாக்கப்படலாம் அல்லது தண்டனை மற்றும் அபராதம் இரண்டும் இரட்டிப்பாக இருக்கலாம்.சமூக ஊடகங்கள் மீதான கட்டுப்பாடு வரவுள்ளமை வரவேற்கத்தக்கது.தாமதம் என்றாலும் இப்போதாவது இது ஆரம்பமாகியுள்ளதே என்று ஆசுவாசப்படலாம்.

சமூக ஊடகங்களைப் பொறுத்த வரையில் பொறுப்புக்கூறல் என்னும் சமூகக் கடப்பாடு, கட்டுப்பாடு என்பன கிடையாது. அதி வேகமான தகவல் பரிமாற்ற தொழில்நுட்பங்களின் வருகை இதற்கு மிக முக்கிய காரணியாகும்.

இவற்றில் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட பொய்யுரைகள், பிழையான மூலங்கள் கொண்டு வடிவமைக்கப்பட்ட செய்திகள், கற்பனை எழுத்துகள் மற்றும் புனையப்பட்ட புகைப்படங்கள், ஓடியோக்கள், வீடியோக்கள் ஆகியன தேசிய, சர்வதேச மட்டத்தில் பல முரண்பாடுகளைத் தோற்றுவிக்கின்றன.

உதாரணமாக WhatsApp ஊடாக கிடைக்கப் பெறும் தகவல்கள் பெரும்பாலும் எங்கிருந்து கிடைகின்றன என்பதனை நமக்கு முதலில் அனுப்பியவர் கூட அறிந்திருக்க மாட்டார். அல்லது அச்செய்தியின் மூலங்கள் (news source), நம்பகத்தன்மை (Credibility) என்பவற்றை நாம் பரீட்சிக்காமலே பகிர்ந்து விடுகின்றோம்.

ஒரு தனிநபரையோ அல்லது ஒரு குழுவையோ வெறுப்பூட்டும் வகையில் செய்திகளை பரப்புதல் பல்வேறு சமூகப் பிரச்சினைகளுக்கு காரணமாக அமைகின்றது. சிலநேரம் வன்முறைகளை ஊக்குவிப்பதுடன் பல உயிர்களைக் காவுகொள்வதற்கும் வழிவகுக்கின்றது. இதன் விளைவாகவே சமூகங்களுக்கிடையிலான பிரச்சினைகள் ஏற்படுகின்றன.கடந்த காலங்களில் பல்லின மக்கள் வாழுகின்ற இலங்கையில் நடைபெற்ற பல பிரச்சினைகளுக்கு கூட மூலமாக வெறுப்பு பேச்சுகளே காரணமாக அமைந்தன.

இவ்வாறான சமூகப் பிரச்சினைகள், இனக் குரோதங்கள், முரண்பாடுகள் ஏற்படுவதற்கான பிரதான காரணம் சமூக ஊடகங்களில் பரப்பப்படும் வெறுப்புப் பேச்சுகளாகும். சமூக ஊடகங்கள் எனப்படுபவை ஒரு பரந்துபட்ட வலையமைப்பாகும். இவற்றில் பதிவிடப்படும் செய்திகளை உலக மக்கள் அனைவரும் பார்க்கக்கூடியதாக உள்ளது. ஆகவே, ஊடகங்களில் கருத்துத் தெரிவிக்கும்போது கவனமாக நடந்துகொள்ளுதல் அவசியம்.

சமூக ஊடகங்களின் செல்வாக்கு இன்று உலகம் பூராகவும் வியாபித்துக் காணப்படுகின்றது. அந்த வகையில் சமூக ஊடகங்கள் செய்திகளை, தகவல்களைப் பதிவிடும்போது, அது சமூகத்தைப் பாதிக்குமா பாதிக்காதா என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

எனவே, சமூக ஊடகங்கள் மற்றும் வெகுஜன ஊடகங்களின் இயல்புகள், செயற்பாடுகள் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தவுள்ளமை வரவேற்கத்தக்கது. சமூக வலைத்தளங்களை உபயோகிக்கும் எவராகினும், எப்பொழுதும் பிற இனங்களின் கலாசார, மத விழுமியங்களுக்கு மதிப்பளித்து செயற்பட வேண்டியது அவசியம்.தனிமனிதர் ஒவ்வொருவருக்கும் சுய கௌரவம், மரியாதை நம்மைப் போல் மற்றவர்களுக்கும் இருக்கின்றது என்பதை உணர்வுபூர்வமாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.

சமூக வலைத்தளங்களில் நாம் தெரிவிக்கின்ற அல்லது பகிர்கின்ற விடயங்களுக்கு நாமே பொறுப்புதாரி. அதனால் ஏற்படும் விளைவுகளுக்கும் நாமே பொறுப்பு.

எமக்கு பதிவிடுவதற்கான உரிமை இருக்கின்றதைப்போல் நாட்டில் அமைதி, சமாதானமான வாழ்க்கை ஆகியவற்றை உறுதிசெய்வதற்க்கான கடமையும் அந்த உரிமையுடன் இணைந்தே இருக்கின்றது என்பதை நாம் கவனத்தில் கொள்ளுதல் அவசியம்.சமூக ஊடகம் என்பது கடிவாளம் இல்லாத குதிரை. அது கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துகள் இருக்க முடியாது.


## இன்றைய நாளில்...

- 1851 – த நியூயோர்க் டைம்ஸ் முதலாவது இதழ் வெளியிடப்பட்டது.
- 1919 – நெதர்லாந்தில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.
- 1924 – மகாத்மா காந்தி இந்து-முஸ்லிம் ஒற்றுமைக்காக 21நாள் உண்ணாநோன்பைத் தொடங்கினார்.
- 1934 – உலக நாடுகள் அணியில் சோவியத் ஒன்றியம் இணைந்தது.

தியா கைவிட்டது.

- 1959 – வன்கார்ட் 3 விண்கலம் பூமியைச் சுற்றிவர அனுப்பப்பட்டது.
- 1977 – வொயேஜர் 1 விண்கலம் பூமியையும் சந்திரனையும் சேர்த்துப் படம் எடுத்தது.
- 1999 – அம்பாறையில் உகனை, மகா ஓயா எல்லைக் கிராமங்களில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் 52 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.
- 2006 – அம்பாறையில் 11 முஸ்லிம் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.





# வாழ்த்தி மகிழ்வோம்!

"ராஜாதி ராஜ! ராஜ கம்பீர! ராஜ மார்த்தாண்ட! ராஜகுல திலக! ராஜ பராக்கிரம! ராஜ வைராக்கிய!...." என நீளும் வரவேற்பு முழக்கங்களோடும் வாழ்த்து வாசகங்களோடும் ஆளும் அரசர்களை அரியணையில் அமர வைக்கும் காட்சிகளை நாம் திரைப்படங்களில் பார்த்திருப்போம்.

"நமசிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க! இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!" எனும் சிவ வாழ்த்துப் பாட்டை சிவன் கோவில்களிலும், "பல்லாண்டு! பல்லாண்டு! பல்லாயிரத்தாண்டு!"எனும் பாசுரங்களை வைணவ ஆலயங்களிலும் கேட்டிருப்போம். பெரும் பெரும் அரசியல் கூட்டங்களில் தலைவர்களின் பெயர்களைக் கூறி "வாழ்க! வாழ்க!" என ஒலிக்கும் வாழ்த்தொலிகளைச் செவி மடுத்திருப்போம். இதில் சிலர் "வாழ்த்த வயதில்லை! வணங்குகிறேன்!" எனச் சுவரொட்டிகள் ஒட்டியும் ஒலி வாங்கிகள் பிடித்தும் தெரிவித்துக் கொண்டிருப்பதையும் அறிந்திருப்போம்!.

வாழ்த்துவதும் வாழ்த்துப் பெறுவதும் நல்ல பழக்கவழக்கம் தான். ஆனால், அது என்ன? "வாழ்த்த வயதில்லை! வணங்குகிறேன்!"?.

வாழ்த்துவதற்கு எப்போதும் வயது ஒரு தடையே இல்லை. மூத்தவர்கள்தாம் வாழ்த்த வேண்டும் இளையவர்கள் வாழ்த்தக்கூடாது என்றெல்லாம் கிடையவே கிடையாது. கடவுளை வாழ்த்துவதால் கடவுளா வாழப்போகிறார்? இல்லை நாம் வாழ்த்தித்தான் கடவுள்கள் வாழ வேண்டிய கட்டாய நிலையிலா இருக்கிறார்கள்? கடவுளரை வாழ்த்துவதன் மூலம் வாழ்த்துகிற மனிதர்கள்தாம் வாழ்வார்கள். இதுவே பக்தியின் தத்துவம்.

வாழ்த்துவதற்கு வயது தேவையில்லை; நல்ல நிறைவான மனமும் அப்பழுக்கற்ற சொற்களும் இருந்தாலே போதும். அடுத்தவர்களை வாழ்த்துகிற ஒவ்வொரு முறையும் அந்தத் தூய்மையான மன அதிர்வலைகள் மூலம் நாமும் வாழ்த்துகள் பெறுகிறோம். ஆசீர்வதிக்கப் பெறுகிறோம். இதுவே நிதர்சன உண்மை.

ஒரு சிறுநகரம். அதன் கடைவீதியில் ஓர் அளவான பலசரக்குக் கடை. கடைக்காரர் நல்லவர். அளவுக்கதிகமான லாபம் வைக்காமல் வியாபாரம் செய்து வந்தார். அவரது நல்லெண்ணத்திற்கேற்ப வணிகமும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தது. அந்தச் சிறுநகரத்தின் பெரும்பான்மை மக்களும் அவரது கடைக்கு வந்தே பலசரக்குகளை வாங்கிப் பயனடைந்து வந்தனர்.

அவரது கடை இருந்த வீதியில், அவரது கடைக்கு எதிர்த்தாற்போல திடீரென ஒரு பெரிய கட்டடம் ஒன்று எழத் தொடங்கியது. அதிவிரைவாக அதன் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வந்தன.

பலசரக்குக் கடைக்காரரும் நாள்தோறும் அக்கட்டட வளர்ச்சியைக் கவனித்து வந்தாரேயொழிய, அது என்ன?ஏது? என்று அக்கறை கொள்ளவில்லை. ஒருநாள் அவரது கடைக்கு வந்த வாடிக்கையாளர் அவரிடம்," இது என்ன கட்டடம் தெரியுமா?''-என்று கேட்டுவிட்டுப், பெரிய பல்பொருள் அங்காடி, டிபார்ட்மெண்டல் ஸ்டோர் வரப்போகிறது! இன்னும் பத்து நாட்களில் கடை திறக்கப்பட இருக்கிறது. இது வந்து விட்டால் உங்கள் கடை வியாபாரம் அதோ கதிதான்" - என்று கூறிவிட்டுச் சென்றார்.

பலசரக்குக் கடைக்காரருக்கு இப்போது என்ன செய்வதென்று தெரியவில்லை. பக்கத்து ஊரில் உள்ள மலையில் வாழும் ஒரு துறவி அவருக்கு குருவாக உள்ளார். பெரும் சிக்கலான தருணங்களில் அந்தத் துறவியிடம் சென்று ஆலோசனை கேட்பதும், அதன்படி தப்பாமல் நடப்பதும் அவரது வழக்கம். மளமளவென்று கடையை அடைத்துவிட்டு, குருநாதரைச் சந்திக்கக் கிளம்பிவிட்டார். மலையில் இருந்த குருநாதரிடம், பல்பொருள் அங்காடி திறக்கப்பட இருப்பதையும், அதனால் தனது வியாபாரம் பாதிக்கப்படவிருப்பதையும் தெரிவித்து தனக்கு வழிகாட்டும்படி வேண்டினார். குருநாதரும் கொஞ்சநேரம் கண்களைமூடி தியானித்து விட்டு கடைக்காரரிடம் யோசனை ஒன்றைக் கூறினார்.

"நாள்தோறும் உனது பலசரக்குக் கடையைத் திறந்ததும் முதலில் நீ என்ன செய்வாய்?"

"கடையில் உள்ள சாமிப் படங்களுக்குப் பத்தி சூடம் காட்டி இன்றைய வியாபாரம் நன்றாக நடக்க வேண்டும் என வேண்டுவேன்!"

" நல்லது!. நாளைமுதல் நீ கடையைத் திறந்து, பத்தி சூடம் காட்டிக் கடவுள்களைக் கும்பிடும் போது, எதிரே உள்ள பல்பொருள் அங்காடியிலும் வாணிபம் சிறப்பாக நடக்கவேண்டும் என வேண்டி, வாழ்த்தி, வழிபாடு நிகழ்த்து!" - என்று குருநாதர் சொன்னார்.

" அப்படியே செய்கிறேன் குருவே!" குருநாதர் வார்த்தைக்கு இருவார்த்தை இல்லை எனக் கிளம்பிவிட்டார்.

மறுநாள் முதல் பலசரக்குக் கடைக்காரர் தன் கடையில் பத்தி சூடம்காட்டி, அப்படியே எதிர்க்கடைக்கும் காட்டி, வாழ்க! வளர்க! என வாழ்த்துச் சொல்லத் தொடங்கினார். சிலநாட்களில் பல்பொருள் அங்காடி கோலாகலமாய்த் திறக்கப்பட்டு, வியாபாரம் அமோகமாய் நடக்கத் தொடங்கியது. இவரது வாழ்த்தும் வழிபாடும் குருநாதர் சொன்னபடி தொடர்ந்துகொண்டே இருந்தது.

ஆறு மாதம் கழிந்தது. பலசரக்குக் கடைக்காரர் குருநாதரைக் காண மலைக்குச் சென்றார். கடைக்காரரைப் பார்த்ததும் குருநாதர் கேட்ட முதல் கேள்வி,

"என்ன பலசரக்குக் கடையை மூடிவிட்டாயா?"

இதற்குப் பலசரக்குக் கடைக்காரர் தந்த பதில்,

"இல்லை! எதிர்த்தாற்போல இருந்த பல்பொருள் அங்காடியை விலைக்கு வாங்கி விட்டேன்!"

இதுதான் வாழ்த்தின் மகிமை. உனது எதிரியையும் நீ வாழ்த்து! என்று நல்ல வார்த்தையை நம்பிக்கையில்லாமல் குருநாதர் சொல்லியிருக்கிறார். அதனால்தான் இருந்த கடையையும் விற்றுவிட்டாயா? என்று அவர் கேட்டிருக்கிறார்.

ஆனால் குருநாதர் சொன்ன வாழ்த்தின் மகிமையை முழுமையாகக் கடைக்காரர் நம்பியதால் போட்டியாக வந்த வணிகத்தையும் தனதாக்கிக் கொள்ள முடிந்தது.வாழ்த்து சக மனிதத்தை அரவணைக்கும் ரசவாதத்தைப் புரிகிறது.

மற்றோரைப் பார்த்து நாம் பொறாமைப்படும்போது, நாம் தாழ்ந்த நிலைக்குத் தள்ளப்படுகிறோம். ஏனெனில், ஏதோவொரு வகையில் அவர்கள் நம்மைவிட மேம்பட்ட நிலையில் இருப்பதாகக் கருதுவதாலேயே பொறாமை ஏற்படுகிறது. இதையே வாழ்த்தாக மாற்றிப் பாருங்கள். நம் நிலைக்கு அவர்களைச் சமமாக்கிப் பார்க்கும் தன்னம்பிக்கை துளிர்ப்பதை மகிழ்வாக உணர முடியும். மேலும், வாழ்த்தும் குணம் வளர வளர நாமும் உயர்ந்து செழிக்கும் பெருமிதத்தை அடைய முடியும்.

வாழ்த்தும் எண்ணம் வளர்வதற்கு, நமது மனம் முழுவதும் அன்பால் நிறையும் நிறைவுக் குணம் பெருக வேண்டும். அன்புடன் பெருகிப் புறப்படும் வாழ்த்து, செல்லும் மனங்களிலெல்லாம் அன்பை நிறைத்துத் தீய குணங்களை அகற்றி விடுகின்றது. பொறாமைக் குணங்களோ தீயாகிப் பரவிக், கொண்டவர் மனத்தையும் கருக்கிக், கொள்பவர் மனத்தையும் கருக்கிடவே செய்கின்றன.

"வாழ்க!" என்பதற்கு எதிர்ச்சொல் "ஒழிக!".

பொதுநிலையில் ஒருமனிதருக்கு வாழ்க! முழக்கமும் கேட்கலாம்; ஒழிக! கோஷமும் ஒலிக்கலாம். இதில் வாழ்த்திற்கு மயங்கி, ஒழிகவுக்குக் கலங்கிடும் உள்ளங்களும் இருக்கவே செய்கின்றன.

ஒரு ராஜா. அவரை நல்லாட்சி நாயகர் என்றே மக்கள் மகிழ்ச்சியோடு அழைத்து வந்தனர். அவர் வாரத்தில் ஒரு நாள் அரண்மனையை விட்டுக் கிளம்பி, நகரத் தெருக்கள் வழியே நகர்வலம் வருவது வழக்கம். வருகின்ற வழியெங்கும், பொதுமக்களும், கடைக்காரர்களும் எழுந்து நின்று, மன்னர் வாழ்க! என மகிழ்ச்சியோடு குரல் எழுப்பி வணங்கி நிற்பர். ஒருநாள் நகர்வலம் முடித்து அரண்மனைக்கு வந்த கையோடு, ராஜா அமைச்சரை அழைத்து,

"அமைச்சரே! இன்று நகர் வலத்தில் ஒன்று கவனித்தீரா?"

"எதைப்பற்றி அரசே!"

"நாம் நகர்வலம் வந்து கொண்டிருந்தபோது, வழியில் நின்றிருந்த மக்கள் எல்லோரும் வாழ்க! வாழ்க! என்றார்கள். கடைகளில் இருந்த வணிகர்கள், கடையை விட்டு வெளியே வந்து மகிழ்ச்சியோடு வாழ்க! சொன்னார்கள்!"

"ஆமாம்! சொன்னார்கள்!"

"ஆமாம்! வணிகர்களில் ஒரே ஒருவரைத் தவிர எல்லாரும் வாழ்த்தினார்கள்!"

"என்ன சொல்கிறீர்கள் அரசே! ஒரே ஒருவர் வாழ்க! சொல்லவில்லையா?"

"ஆம்! அமைச்சரே! அந்தச் சந்தனக்கட்டை வணிகம் செய்பவர்தான் என்னைப்பார்த்து, வணங்கவும் இல்லை! வாழ்த்தவும் இல்லை! மாறாக, உம்மென்று சோகமாக நின்றுகொண்டு மனத்திற்குள் ஒழிக! ஒழிக! என்று சொல்லிக் கொண்டு இருப்பது போலவும் தோன்றியது!".

"அப்படியா? அரசே! இப்போதே கடைவீதிக்குச் சென்று, அவரிடம் விசாரணை மேற்கொண்டு விவரம் அறிந்து வருகிறேன்!"-அமைச்சர் விடைபெற்றார்.

ஒருமணிநேரம் கழித்து அரண்மனைக்குத் திரும்பிய அமைச்சர் நேராக அரசரிடம் சென்று பணிந்து நின்றார்.

"என்ன அமைச்சரே! காரணம் அறிந்து வந்தீரா?

"ஆம் அரசே! காரணம் அறிந்து எல்லாவற்றையும் சரி செய்து விட்டும் வந்து விட்டேன்."

"விஷயம் இவ்வளவுதான் அரசே!. அந்தச் சந்தனக்கட்டை வியாபாரி இன்றுமட்டுமல்ல, இதற்குமுன் எப்போது நீங்கள் நகர்வலம் போனாலும் இதேபோலச் சோகமாகத்தான் இருப்பானாம். இன்று தான் உங்கள் கண்ணில் அவன் சிக்கியிருக்கிறான்."

"அவன் பார்த்து வருவது சந்தனக்கட்டை முதலான பல வாசனைக் கட்டைகளின் வியாபாரம். இவற்றின் வணிகம், மற்றெந்தப் பொருட்களையும்போல எப்போதும் சிறப்பாக நடப்பதில்லை. இதற்குமுன் நல்ல வியாபாரம் என்பது உங்கள் தந்தை மகாராஜா இறந்தபோதுதான் நடைபெற்றதாம். அவரது உடலை எரியூட்டப் பல லட்சக்கணக்கில் வாசனைக்கட்டைகள் விற்றுத் தீர்ந்தனவாம். அதன் பின் நல்ல வியாபாரம் என்பது நீங்கள் இறந்தால்தான் நடைபெறும் என்பது அவனது எதிர்பார்ப்பு. அதனால் தான் ஒவ்வொருமுறை நீங்கள் நகர்வலம் வரும்போதும் சோகத்தோடும் ஏக்கத்தோடும் உங்களை வாழ்த்தாமல், உங்களையே பார்த்துக்கொண்டிருக்கிறான்."

"ஆனாலும் அவனது சோகத்திற்கு ஒரு மாற்று ஏற்பாடு செய்துவிட்டேன். இந்த வாரத்தில் வரவிருக்கும் உங்களது பிறந்த நாளை மக்கள் தெருமுனைகளில் சந்தனக்கட்டைகள் கொளுத்தி நகரெங்கும் சந்தனப்புகை கமழக் கொண்டாட வேண்டும்! எனப் பறை அறிவிக்கச் செய்துவிட்டேன்.

"இனி ஆண்டுக்கொருமுறை சந்தனக்கட்டை அமோகமாக விற்பனையாகும். நகர்வலத்தில் மன்னரைப் பார்க்கும் போதெல்லாம் எப்போது சாவார்! என்று ஒழிக! சொல்லிக்கொண்டிருந்த சந்தனக்கட்டைக் கடைக்காரர்,அரசருக்குப் பிறந்த நாள் ஆண்டுதோறும் வரட்டும்! வாழ்க! வாழ்க! பல்லாண்டு! என வாரந்தோறும் வாழ்த்தவும் தொடங்கி விடுவார்!" என்றார் அமைச்சர்.

எந்தப் பிரச்சினையையுமே நேர்மறையாக எடுத்துக்கொண்டு, அதனை நேர்மறையில் தீர்த்துவைத்த இந்த அமைச்சரின் செயல் கவனிக்கத்தக்கது. ஒருவகையில் வாழ்க! என்பதும், ஒழிக! என்பதும் ஒன்றுபோலவே ஆகிவிடுவதற்கும் வாய்ப்புண்டு.

***"வாழ்க!" நம்மை மகிழ வைக்கிறது!***
***"ஒழிக!" நம்மை உணர வைக்கிறது!***
***வாழ்த்த வாழ்வோம்!***
***வாழ்த்தி வாழ்வோம்!***

**சுந்தரா ஆவுடையப்பன்**

*நன்றி - மாலைமலர்*

## நக்கல் நமசிவாயம்

**இந்திய கிரிக்கெட் அணி மேல உள்ள கோபத்தில, 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்தவே வேண்டாமெண்டு இன்னும் கத்தப்போறாங்கள்..**



# இயற்கையோடு இயைந்த கற்றலே மாணவர்களை மேலும் வலுவூட்டும் சிறீதரன் எம்.பி.

புு.கஜிந்தன்





இயற்கை நேயமிக்க பாடசாலைச் சூழலே மாணவர்களுக்கு உளவியல் ரீதியாக புத்தெழுச்சியூட்டி, அவர்களிடையே கல்வி மற்றும் இணை பாடவிதான செயற்பாடுகளில் உள்ளார்ந்த விருப்போடு ஈடுபடுவதற்கான தூண்டலை ஏற்படுத்தும். பிள்ளைகளின் அடிப்படை எதிர்பார்ப்புகளுக்கேற்பவே பாடசாலைகளின் அகப்புறச் சூழல் கட்டமைக்கப்பட வேண்டும். அதுவே மகிழ்வான கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுக்கு களம் அமைத்துக் கொடுக்கும் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கிளி/பேராலை சி.சி.த.க. பாடசாலையின் சிறுவர் விளையாட்டு முற்றத் திறப்புவிழா நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே சிறீதரன் எம்.பி. மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

கிளிநொச்சி வடக்கு கல்வி வலயத்தின் பச்சிலைப்பள்ளிக் கோட்டத்தில் வெறுமனே 32 மாணவர்களோடு இயங்கும் ஆரம்பப் பாடசாலையான இப்பாடசாலை, தனது கட்டமைப்பு ரீதியாகக் கொண்டிருக்கின்ற கம்பீரத் தோற்றம், வனப்புமிகு பௌதீகச் சூழல் அதன் கவின்நிலை, கல்வித் தராதரம் என்பவை மாணவர்களுக்கு மகிழ்வளிக்கக்கூடிய கற்றல் சூழலை ஏற்படுத்தியுள்ளதை என்னால் அவதானிக்க முடிகிறது. ஒரு பாடசாலையின் வளர்ச்சிக்கு மாணவர் எண்ணிக்கையோ, அதன் அமைவிடப் பிரதேசமோ தடையாகாது என்பதற்கு இப்பாடசாலையை நான் முன்னுதாரணமாகக் கருதுகிறேன்.

பாடசாலைகளின் பௌதீகச் சூழல் கட்டமைப்பு, கல்வி அடைவுமட்டம் என்பவற்றின் விளிம்பு நிலைக்கு மாணவர்களது எண்ணிக்கைக் குறைவைக் காரணம் காட்டும் பல பாடசாலைகளின் நிர்வாகங்களும் திணைக்கள மட்டங்களும் இந்தப் பாடசாலையைத் தமக்கான வழிகாட்டியாகக் கொள்ள வேண்டும் என தெரிவித்திருந்தார்.

பாடசாலையின் அதிபர் நடராசா இராமதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பச்சிலைப்பள்ளி கோட்டக்கல்விப் பணிப்பாளர் தி.திலீபன், பழைய மாணவர்களும் பாடசாலை நலன்விரும்பிகளுமான செல்லையா கனகரத்தினம், சிவகுரு செல்வராசா மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் மேனாள் உறுப்பினர் அருள்செல்வி கனகராசா, பெற்றோர், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சுற்றாடலுக்கு பொறுப்பான அரச நிறுவனங்களை மீண்டும் மறுசீரமைக்க அரசாங்கம் தீர்மானம்

## சாகல ரத்நாயக்க





சுற்றாடல் தொடர்பில் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டுள்ள அரச நிறுவனங்களை மீண்டும் மறுசீரமைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

மறுசீரமைப்புப் பணிகளை மேற்கொள்ளவும் மற்றும் சூழலைப் பாதுகாப்பதற்குத் தேவையான சட்டங்களை மேலும் வலுப்படுத்துவதற்கும் குழுவொன்று நியமிக்கப்படும் என்றும் சாகல ரத்நாயக்க குறிப்பிட்டார்.

மேலும், சுற்றாடல் மாசடைவதைத் தடுத்து சுற்றாடலைப் பாதுகாக்கும் நோக்கில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, செயலணியொன்றை நியமிக்கவுள்ளதாகவும் சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பான வேலைத்திட்டங்களைத் தயாரித்து அவற்றை நடைமுறைப்படுத்துவது மற்றும் கண்காணிப்பது இந்த செயலணியின் பொறுப்பாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

துறைமுக நகரின் செயற்கைக் கடற்கரையில் (Beach Plaza) சனிக்கிழமை (16) முற்பகல் நடைபெற்ற கடற்கரையை சுத்தப்படுத்தும் வேலைத்திட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க இதனைத் தெரிவித்தார்.

செப்டெம்பர் 16ஆம் திகதி சர்வதேச கடலோர தூய்மை தினம் என்பதாலும் மற்றும் கடல் வள பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டும், நாடு முழுவதும் உள்ள 14 கரையோர மாவட்டங்களையும் உள்ளடக்கிய வகையில், அடையாளம் காணப்பட்ட கடற்கரைகள் மற்றும் களப்புகளை இலக்காகக் கொண்டு 66 இடங்களில் சுத்தம் செய்தல் நிகழ்ச்சிகள், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் கடலினுள் சுத்தப்படுத்தும் பணிகள், கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையினால் ஏற்பாடு செய்யப்பட்டதுடன், துறைமுக நகரத்தின் செயற்கை கடற்கரையுடன் அந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

சாகல ரத்நாயக்கவும் கடற்கரையை சுத்தப்படுத்தும் நடவடிக்கைகளில் இணைந்துகொண்டார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த சாகல ரத்நாயக்க,

சர்வதேச கடலோர தூய்மை தினம் மற்றும் கடல் வளப் பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு இந்த வேலைத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. கரையோரச் சூழல், நீர்த்தேக்கங்கள் மற்றும் கால்வாய்கள், ஆற்றங்கரைச் சூழல் ஆகியவை நமக்கு மிகவும் முக்கியமானவை. ஒருபுறம், ஒரு தீவு நாடாக, எமக்கு நீர் வளம் மிகவும் முக்கியமானது. மறுபுறம், சுற்றுலாத்துறையில் தங்கியிருக்கும் நாடு என்ற வகையில், சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கத் தேவையான சூழலை நாம் எப்போதும் பாதுகாக்க வேண்டும்.

மக்களிடையே மனப்பாங்கு மாற்றத்தை ஏற்படுத்தவும், விழிப்புணர்வை ஏற்படுத்தவும், குறிப்பாக குழந்தைகளிடையே சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் இதுபோன்ற திட்டங்கள் மிகவும் முக்கியம். எனவே இதை ஏற்பாடு செய்த அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

நாம் எப்போதும் இவ்விடயங்கள் பற்றி கதைத்துக்கொண்டு மாத்திரமே இருந்தோம். எனவே, இதுபோன்ற திட்டங்களை செயல்படுத்துவது தான் மிகவும் முக்கியம்.

இது குறித்து செயற்படுவதற்கு, கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை, கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம், உள்ளூராட்சி மன்றங்கள் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்கள் உள்ளன. இது கடற்படையின் பொறுப்புமல்ல. என்றாலும், அவர்களும் இதற்கு ஒத்துழைப்பு வழங்குகின்றனர். இலங்கை சுற்றுலா சபையின் கீழ் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட சுற்றுலா வலயங்கள் உள்ளன.

சூழல் தொடர்பான பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டுள்ள இந்த அரச நிறுவனங்களை மீண்டும் மறுசீரமைக்க நாம் தீர்மானித்துள்ளோம். அதற்காக ஒரு குழு நியமிக்கப்படவுள்ளது. இந்த மறுசீரமைப்புப் பணிகளுக்குப் பின்னர், தற்போதுள்ள சட்டங்களை வலுப்படுத்தவும் நாங்கள் எதிர்பார்க்கிறோம். இதற்கு இணையாக ஜனாதிபதி, இதற்கான செயலணி ஒன்றை நியமிக்கவும் உள்ளார். வேலைத்திட்டங்களை தயாரித்தல், செயல்படுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல் அதன் பொறுப்பாகும்.

மக்களை முறையாகத் தெளிவுபடுத்துவதற்கும், நிலைபேறான திட்டங்களை செயல்படுத்தி சூழல் மாசடைவதைக் குறைப்பதற்கு நாம் இந்தத் திட்டங்களின் மூலம் எதிர்பார்க்கின்றோம்.

சூழல் நமக்கு மிகவும் முக்கியமானது. நாம் சூழலை பாதுகாக்காவிட்டால் அடுத்த தலைமுறை இந்த சுற்றுச்சூழலை இழக்க நேரிடும். மேலும், சூழலைப் பாதுகாப்பதன் மூலமே நாட்டின் பொருளாதாரத்தின் நிலைத்தல் தன்மையை உறுதி செய்ய முடியும். அந்த அனைத்து பொறுப்புகளையும் அரசாங்கத்திடம் மாத்திரம் ஒப்படைக்க முடியாது.

சூழலைப் பாதுகாக்கும் பொறுப்பு மக்களுக்கும் உள்ளது. அந்தப் பொறுப்பை மக்களுக்குத் தெளிவுபடுத்த சரியான வேலைத்திட்டம் இருக்க வேண்டும். எனவே, அந்தப் பொறுப்பை உரிய முறையில் நிறைவேற்ற நாம் உறுதி பூண்டுள்ளோம்.

அதேபோன்று, குறைபாடுகளை தவிர்த்து நாம் இந்த செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். இன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள இந்த வேலைத்திட்டம் மிகவும் முக்கியமானது என்றே கூற வேண்டும். மேலும், இந்த திட்டத்துக்கு கலைத்துறையை இணைத்துக் கொண்டிருப்பது மிகவும் சிறந்த போக்காகும். மேலும் இதற்கு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதும் பெரும் பலமாக அமையும். இந்த வேலைத்திட்டத்தில் ஈடுபட்டுள்ள அனைத்து நிறுவனங்கள், திணைக்களங்கள் மற்றும் பாதுகாப்புப் படையினருக்கு நான் நன்றி தெரிவிக்கிறேன்.

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா, கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் சட்டத்தரணி அசேல பி.றெகவ, பொது முகாமையாளர் ஜகத் குணசேகர, உட்பட பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் மற்றும் துறைமுக நகர் தனியார் நிறுவனத்தின் சுற்றாடல் ஆலோசகர் டபிள்யூ.ஏ.டி.டி.விஜேசூரிய மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள், சமுத்திரப் பல்கலைக்கழகத்தின் மாணவ, மாணவிகள் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# மசூர் மௌலானாவின் மனைவி காலமானார்

சாய்ந்தமருது செய்தியாளர்



கல்முனை மாநகர முன்னாள் முதல்வரும் முன்னாள் செனட்டருமான மர்ஹூம் எஸ்.இஸட்.எம்.மசூர் மௌலானாவின் மனைவி பிஸ்றதுல் நயீமா மௌலானா சனிக்கிழமை (16) கொழும்பில் காலமானார்.

அன்னார் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபன முஸ்லிம் நிகழ்ச்சித் தயாரிப்பாளரான மபாஹிர் மௌலானா, ஜெஸ்மின் பௌஸி, மௌலானா ட்ரவல்ஸ் நிறுவனப் பணிப்பாளர்களான அக்ரம் மௌலானா, ஷியாம் மௌலானா, இலங்கை துறைமுக அதிகார சபை உத்தியோகத்தர்களான இல்ஹாம் மௌலானா, நௌஷாட் மௌலானா ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அவரது ஜனாஸா நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை மாளிகாவத்தை மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

# யாழ். மாணவர்களால் இரத்ததான முகாம்

பு.கஜிந்தன்

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில், தமிழர் தேசத்தின் விடுதலைக்காய், உண்ணாநோன்பிருந்து காந்தி தேசத்துக்கு புரியும் மொழியில் அஹிம்சையைப் போதித்த தியாக தீபம் அண்ணன் திலீபனின் நினைவேந்தி குருதிக்கொடை பின்வரும் நாட்களில் நடைபெறவுள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமை (19) மாணவர் கட்டடத் தொகுதி (Students Complex), பல்கலைக்கழக பிரதான வளாகம், யாழ்ப்பாணம். 26ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தொழில்நுட்பபீடம், கிளிநொச்சி வளாகம், யாழ் பல்கலைக்கழகம். குருதிக் கொடை செய்ய விரும்பும் மாணவர்கள் தமக்குக் கிட்டிய எவ்விடத்திலும் வழங்க முடியும் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.





2023இல் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பாடசாலை மாணவர்களுக்கான பரீட்சை முன்னோடி மற்றும் விசேட கருத்தரங்கு, பெற்றோர்களுக்கான வழிகாட்டல் செயலமர்வு அல்- பலாஹ்வின் அனுசரணையில் இடம்பெற்றது. மாவனல்லை பதுரியா 05ஆம் ஆண்டு வகுப்புப் பிரிவுக்கான உப அதிபர் திருமதி எம்.வை.எச்.ஜன்னா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அல்- பலாஹ்வின் சிரேஷ்ட முகாமையாளர் முஹம்மது தில்பவ்சி முஸ்லிம் கலந்து கொண்டு சிறப்பித்தார். இதன்போது வளவாளர்கள், பலாஹ்வின் ஊழியர்கள் மற்றும் பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

படங்கள்: இக்பால் அலி

# கொலைகளுக்குப் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கி சஞ்சீவவிடம் நடத்திய விசாரணையில் மீட்பு

போதைப்பொருள் கடத்தல்காரரும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியுமான கணேமுல்லே சஞ்சீவ என அழைக்கப்படும் சஞ்சீவ குமாரவிடம் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் ரி-56 ரக துப்பாக்கியை கண்டுபிடித்துள்ளனர்.

இதன்படி, கம்பஹா உள்ளிட்ட பல பகுதிகளில் இடம்பெற்ற கொலைகளுக்கு பயன்படுத்தப்பட்ட துப்பாக்கியே குறித்த துப்பாக்கி என தெரியவந்துள்ளது.

கொழும்பு மேற்கு, வடக்குக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரொஹான் பிரேமரத்னவின் மேற்பார்வையில் சஞ்சீவவிடம் மேலதிக விசாரணைகள் கணேமுல்லையில் இடம்பெற்று வருகின்றன.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கணேமுல்ல சஞ்சீவவை 90 நாட்கள் தடுத்து வைத்து விசாரணை நடத்துவதற்கு பாதுகாப்பு அமைச்சு அண்மையில் அனுமதி வழங்கியிருந்தது.

# விக்டோரியா வனத்தில் வெடிபொருட்கள் மீட்பு

கண்டி - பதியபெலெல்ல வீதியின் 16ஆவது கட்டைக்கு அருகிலுள்ள விக்டோரியா வனப்பகுதியிலிருந்து வெடிபொருட்கள் சில கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இந்த வெடிபொருட்களில் கறை படிந்திருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

119 என்ற இலக்கத்தின் ஊடாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய, இந்த வெடிபொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கண்டுபிடிக்கப்பட்ட வெடிபொருட்கள் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் தலாத்துஓயா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மாணவர்களுக்கு நிர்வாண படம் காட்டிய ஆசிரியர் கைது

ஏ.ஏ.எம்.பாயிஸ்

தன்னிடம் கல்வி கற்கும் தனது பாடசாலை மாணவர்களுக்கு நிர்வாணப் படம் காட்டிய 34 வயது ஆசிரியர் ஒருவர் நேற்று (17) கைது செய்யப்பட்டுள்ளார்.

ஒப்பனாயக்க பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்த ஆசிரியரிடம் தரம் 8இல் கல்வி கற்கும் மாணவ மாணவிகளுக்கு இவர் பல தடவைகள் நிர்வாணப் படங்களைக் காட்டி வந்துள்ளதாகவும் மாணவர்கள் தமது பெற்றோர்களிடம் இவ்விடயத்தை கூறிய பின் பெற்றோர் பாடசாலை அதிபரை அறிவுறுத்தியதையடுத்து பாடசாலை அதிபர் ஒப்பனாயக்க பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து, மேற்படி சந்தேக நபரான ஆசிரியர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.


தேசிய லொத்தர் சபை National Lotteries Board — வெள்ளிக்கிழமை 2023.09.15 — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk — NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5238 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 26,808,456.00
ஆங்கில எழுத்து N — வெற்றி இலக்கங்கள் 0 9 1 0 7 8

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3480 — சீட்டிழுப்பு திகதி 2023.09.15 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 60,584,553.60
ஆங்கில எழுத்து Q — வெற்றி இலக்கங்கள் 07 27 48 74 — விசேட எழுத்து Q — இலட்சாதிபதி பவர் சான்ஸ் வெற்றி இலக்கம் 26422

லக்கி 7 — திகதி 15.09.2023 — சீட்டிழுப்பு இலக்கம் 0064 — வெற்றி இலக்கினம் மேஷம் — L7 இலக்கம் 0 9 — வெற்றி இலக்கங்கள் 8 9 5 9 7 3 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 10,931,872.48

தன நிதானய — தேதி 2023/09/15 — சீட்டிழுப்பு இலக்கம் 1268 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 110,120,603.20
ஆங்கில எழுத்து P — வெற்றி இலக்கங்கள் 24 42 46 56 — விஷேசட ஆங்கில எழுத்து P — Double Chance இலக்கம் 04411

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 547 — சீட்டிழுப்பு திகதி 2023-09-15 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,575,913.20
வெற்றி இலக்கினம் மிதுனம் — வெற்றி இலக்கங்கள் 14 22 45 61 — விசேட இலக்கினம் மிதுனம்

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1586 — 15/09/2023 — 42359 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 407,883,424.00
ஆங்கில எழுத்து Q — சுப்பர் இலக்கம் 08 — வெற்றி இலக்கங்கள் 07 13 63 69 — அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board — சனிக்கிழமை 2023.09.16 — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk — NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5239 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 26,864,432.00
ஆங்கில எழுத்து N — வெற்றி இலக்கங்கள் 9 2 2 8 3 8

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3481 — சீட்டிழுப்பு திகதி 2023.09.16 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 60,758,015.60
ஆங்கில எழுத்து A — வெற்றி இலக்கங்கள் 23 39 60 79 — விசேட எழுத்து A — இலட்சாதிபதி பவர் சான்ஸ் வெற்றி இலக்கம் 28165

லக்கி 7 — திகதி 16.09.2023 — சீட்டிழுப்பு இலக்கம் 0065 — வெற்றி இலக்கினம் மகரம் — L7 இலக்கம் 0 2 — வெற்றி இலக்கங்கள் 1 0 1 2 8 4 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 10,931,872.48

தன நிதானய — தேதி 2023/09/16 — சீட்டிழுப்பு இலக்கம் 1269 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 110,345,118.40
ஆங்கில எழுத்து V — வெற்றி இலக்கங்கள் 20 32 49 80 — விஷேசட ஆங்கில எழுத்து V — Double Chance இலக்கம் 42496

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 548 — சீட்டிழுப்பு திகதி 2023-09-16 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,000,000.00
வெற்றி இலக்கினம் கும்பம் — வெற்றி இலக்கங்கள் 16 18 25 50 — விசேட இலக்கினம் கும்பம்

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1587 — 16/09/2023 — 63242 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 408,016,072.00
ஆங்கில எழுத்து A — சுப்பர் இலக்கம் 11 — வெற்றி இலக்கங்கள் 18 38 53 70 — அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# பொலிஸார் – இராணுவம் இணைந்து இரு வார காலத்துக்குள் சட்டவிரோத மணல் அகழ்வை தடுத்து நிறுத்துக!

## அமைச்சர் டக்ளஸ் அதிரடி உத்தரவு

■ மு.தமிழ்ச்செல்வன்



சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பான கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்ட செயலக மண்டபத்தில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பல பகுதிகளில் சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்ச்சியாக நடைபெற்று வருவதால் பல இயற்கை வளங்கள் அழிக்கப்படுவதோடு நெற்செய்கை மேற்கொள்ளப்படும் வயல் நிலங்களும் அழிக்கப்பட்டு வருவதாக பல தரப்பினராலும் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைவாக நேற்று அதிரடி உத்தரவை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிறப்பித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

இரண்டு வார காலத்துக்குள் பாதுகாப்புத் தரப்பினர், பொலிஸார் மற்றும் கனியவள திணைக்களத்தின் ஒருங்கிணைந்த நடவடிக்கையினூடாக கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்ற சட்டவிரோத மணல் கடத்தல்களை உடனடியாகத் தடுத்து நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

குறிப்பாக, கல்லாறு, உமையாள்புரம், விளாவோடை, தட்டுவன்கொட்டி, இரணைமடு குளத்தின் கனகராயன் ஆற்றுப்படுக்கை, பன்னங்கண்டி, செருக்கன், முரசுமோட்டை மற்றும் கண்டாவளை அண்டிய பிரதேசங்களும், ஊரியான், முரசுமோட்டை, பெரியகுளம், கிளாலி உள்ளிட்ட அடையாளம் காணப்பட்ட பிரதேசங்களிலேயே தொடர்ச்சியாக மண் அகழ்வு இடம்பெறுவதாக சுட்டிக்காட்டப்படுகின்ற நிலையில், அதனைத் தடுத்து நிறுத்த உடன் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் குறித்தே ஆராயப்பட்டமை குறிப்பிடத்தக்க விடயம்.

இக்கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் முரளிதரன், இராணுவத்தின் 55 ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் நளின் ஜெயவர்த்தனா, 551 இராணுவக் கட்டளை அதிகாரி யூட் காரியகருவன, விசேட அதிரடிப்படையின் கிளிநொச்சி கட்டளை அதிகாரி, பிரதிப் பொலிஸ் மா அதிபர் மற்றும் அரசாங்க அதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# தாவடியில் வீடு ஒன்றுக்கு பெற்றோல் குண்டுத் தாக்குதல்




சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தாவடி - வன்னியசிங்கம் வீதியில் உள்ள வீடொன்றின் மீது அதிகாலை 3.00 - 4.00 மணிக்குட்பட்ட நேரத்தில் பெற்றோல் குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. வீட்டில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த வாகனங்களின் கண்ணாடிகள் மற்றும் வீட்டில் உள்ள உடமைகள் என்பன அடித்து நொறுக்கப்பட்டுள்ளன.

குறித்த தாக்குதலில் ஐந்து பேர் காயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

உரும்பிராய் பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்ட வீட்டில் உள்ள யுவதியை காதலித்ததாகவும் பெற்றோரிடம் திருமணம் செய்து வைக்குமாறு கூறியபோது பெற்றோர் மறுத்திருந்த நிலையில், குறித்த இளைஞன் தனது குழுவினருடன் சென்று நேற்று அதிகாலை வீட்டைத் தாக்கி சேதப்படுத்தி வீட்டில் பெற்றோல் குண்டுத் தாக்குதலையும் மேற்கொண்டுள்ளார். குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# புகையிரத பயணிகளின் பிரச்சினையை தீர்த்து வைக்குமாறு மக்கள் கோரிக்கை






■ மன்னார் நகர் நிருபர்

கொழும்பு கோட்டையிலிருந்து தலைமன்னாருக்கான புகையிரத சேவை சுமார் 09 மாதங்களின் பின் கடந்த வெள்ளிக்கிழமை(15) ஆரம்பிக்கப்பட்டுள்ளபோதும் மன்னார் மாவட்டத்திலிருந்து கொழும்புக்கு ஆசன முன்பதிவு செய்து பயணம் மேற்கொள்ள முடியாத நிலையே ஏற்பட்டுள்ளதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

பல்வேறு தரப்பினராலும் விடுக்கப்படும் தொடர்ச்சியான கோரிக்கைகளுக்கமைவாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மடு திருத்தலத்தில் வைத்து அண்மையில் வழங்கிய வாக்குறுதிக்கமைவாகவும் கொழும்பிலிருந்து தலைமன்னாருக்கான புகையிரத சேவை வெள்ளிக்கிழமை (15) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கொழும்பு கோட்டையிலிருந்து மாலை 3.55 மணிக்கு புறப்படும் புகையிரதம் அன்றைய தினம் இரவு 10.48 மணிக்கு தலைமன்னாரைச் சென்றடைய பின்னர் காலை 4.15 மணிக்கு தலைமன்னாரிலிருந்து புறப்படும் புகையிரதம் அன்றைய தினம் காலை 10.34 மணியளவில் கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தைச் சென்றடையும்.

இந் நிலையில், முதலாம் வகுப்பு குளிரூட்டப்பட்ட ஆசன முன்பதிவு மற்றும் 2 ஆம் வகுப்பு ஆசன முன்பதிவுகளை மேற்கொண்டு மன்னார் மாவட்டத்தில் இருந்து மக்கள் பயணங்களைத் தொடர முடியும் எனவும் அறிவிக்கப்பட்டது.

எனினும், கொழும்பிலிருந்து தலைமன்னாருக்கு ஆசன முன்பதிவுகளை மேற்கொண்டு மக்கள் பயணங்களை மேற்கொள்கின்றபோதும் தலைமன்னாரிலிருந்து மக்கள் முன்பதிவுகளை மேற்கொண்டு கொழும்புக்கு செல்ல முடியாத நிலையில் புகையிரத நிலையங்களில் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

தலைமன்னார் தொடக்கம் மடு வரையிலான புகையிரத நிலையங்களில் ஆசன முன்பதிவு செய்யக்கூடிய வசதிகள் இதுவரை இல்லை எனவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். மேலும் மன்னார் மாவட்டத்தில் உள்ள பிரதான புகையிரத நிலையங்களில் காணப்பட்ட கணினி வசதிகள் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளமையினாலேயே குறித்த முன்பதிவுகளை முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

# அதிகளவான சுற்றுலாவிகளின் வருகையை வரவேற்றுக் கொண்டாடிய சுற்றுலாப் பணியகம்





■ பு.கஜிந்தன்

கோடிலியா சுற்றுலா கப்பல் மூலம் ஜூன் 16முதல் 9 தடவைகளாக காங்கேசன்துறையூடாக யாழ்ப்பாணம் வந்த 6,000க்கும் மேற்பட்ட சுற்றுலாவிகளை வரவேற்றுக் கொண்டாடும் நிகழ்வு காங்கேசன்துறை வலி வடக்கு பிரதேச சபைக் கட்டடத்தில் வெள்ளிக்கிழமை (15) நடைபெற்றது.

வடக்கு மாகாண சுற்றுலாத்துறைப் பணியகத்தின் ஏற்பாட்டில், யாழ்ப்பாண இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நடராஜ் மற்றும் தூதரக அதிகாரி ராம் மகேஷ் உள்ளிட்டவர்களின் பங்கேற்புடன் நடைபெற்ற இந்நிகழ்வில், சுற்றுலாவிகள் வரவேற்கப்பட்டதுடன், சுற்றுலாப் பயணிகளுக்கு வரவேற்பு உபசார சேவை மற்றும் போக்குவரத்துச் சேவையை வழங்கியவர்களும் நன்றி கூறி கௌரவிக்கப்பட்டனர்.

வடக்கு மாகாண சுற்றுலாத்துறை பணியகத் தலைவர் பத்திநாதன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், ஆரம்பத்தில் சுற்றுலாப் பயணிகளுக்காக அமைக்கப்பட்ட உள்ளூர் உற்பத்திகளுக்கான காட்சிக்கூடங்களை இந்தியத் துணைத் தூதுவர் உள்ளிட்ட குழுவினர் பார்வையிட்டதுடன், உற்பத்தி மற்றும் விற்பனையாளர்களுக்கு சுற்றுலாப் பயணிகளால் கிடைத்துவரும் நன்மைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இதேபோல், சுற்றுலாப் பயணிகளுக்கான முச்சக்கரவண்டி, தனியார் வாகன சேவையை வழங்கி வரும் போக்குவரத்துச் சங்கங்கள் மற்றும் தனியார் வாகன உரிமையாளர்களுக்கும் அவர்கள் வழங்கிவரும் சேவைக்காக நன்றி கூறி பாராட்டப்பட்டதுடன், ஆரம்பம் முதல் சுற்றுலாவிகளை வரவேற்கும் இந்த ஏற்பாட்டை களத்தில் ஒருங்கிணைத்துச் செயற்படுத்திவரும் தெல்லிப்பளை பிரதேச செயலகம் மற்றும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை உத்தியோகத்தர்களுக்கும் நன்றி தெரிவித்து பாராட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# 'புதிய மதுபானசாலை அமைக்க இடமளியோம்' பிரதேச மக்கள் வீதிக்கு இறங்கிப் போராட்டம்



■ ஆ.ரமேஸ்

ஹட்டன், குயில்வத்தைப் பகுதியில் புதிய மதுபானசாலை ஒன்று அமைக்கப்படவுள்ளமைக்கு எதிர்ப்பு தெரிவித்து பிரதேச மக்கள் வீதிக்கு இறங்கி போராடி தங்களது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

மலையக மக்கள் முன்னணியின் மகளிர் அணி பிரதித் தலைவியும் முன்னாள் அம்பேகமுவ பிரதேச சபை உறுப்பினருமான சுவர்ணலதா இலங்கேஸ்வரன் தலைமையில் இப்போராட்டம் நேற்று முன்தினம் (16) மாலை குயில்வத்தை நகரில் இடம்பெற்றது.

இதன்போது ஹட்டன், குயில்வத்தை பகுதியில் மதுபானசாலையொன்றை அமைக்க சம்பந்தப்பட்டவர்கள் ஏற்பாடுகளை முன்னெடுத்து வருகின்ற நிலையில், அதற்கு எதிர்ப்பைத் தெரிவித்து தாம் வீதிக்கு இறங்கியுள்ளதாகவும் மலையக மக்கள் முன்னணித் தலைவரும் நுவரெலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான வீ.இராதாகிருஷ்ணனின் வேண்டுகோளுக்கிணங்க, இந்த எதிர்ப்பு போராட்டம் முன்னெடுப்பதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

புதிய மதுபானசாலை அமைக்கப்படவுள்ள பகுதியில் பாடசாலை, ஆலயம் காணப்படுவதுடன், அதிகமாக பொதுமக்கள் நடமாடும் இடம் என்பதால் இவ்வாறு மதுபானசாலையை அமைத்தால் பாரிய பாதிப்புகளுக்கு முகம்கொடுக்க நேரிடுவதுடன் சமூக சீர்கேட்டுக்கும் வழியமைக்கும்.

எனவே, இப்பகுதியில் மதுபானசாலையை அமைக்க விடமாட்டோம் எனவும் மலையக மக்கள் முன்னணியின் மகளிர் அணி பிரதித் தலைவியும் முன்னாள் அம்பேகமுவ பிரதேச சபை உறுப்பினருமான சுவர்ணலதா இலங்கேஸ்வரன் தெரிவித்தார்.

# தோட்டத் தொழிலாளர்கள் 06 பேர் குளவிக் கொட்டுக்கு இலக்கு

■ மஸ்கெலியா, கண்டி நிருபர்கள்

நல்லதண்ணி பொலிஸ் பிரிவில் உள்ள மறே தோட்டப்பகுதியில் இரு அதிகாரிகள் உட்பட பெண் தொழிலாளர்களுமாக 06 பேர் நேற்று முன்தினம் (16) மாலை 4.30 மணிக்கு குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

இந்நிலையில், இவர்கள் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வெளியேறினார்கள் என மாவட்ட வைத்தியசாலை அதிகாரி தெரிவித்தார்.

குறித்த தோட்டப் பகுதியில் தேயிலைக் கொழுந்து பறித்துக்கொண்டிருந்த வேளையில் தேயிலைச் செடிகளின் வேர்ப்பகுதியில் இருந்த குளவிக்கூடு கலைந்து அவர்களைத் தாக்கியதால் இந்த ஆறுபேரும் குளவிக் கொட்டுக்கு இலக்காகிய நிலையில், மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வெளியேறினார்கள்.

# தோட்டக் கம்பனியின் தனியார் பாதுகாப்பு படையால் தொழிலாளர்களுக்கு அச்சுறுத்தல்

■ ஏ.ஏ.எம்.பாயிஸ்

கஹவத்தை தோட்டக் கம்பனி நடத்திவரும் சட்டவிரோத பாதுகாப்புப் பிரிவின் நடவடிக்கைகளால் தோட்ட மக்களும் அண்மித்த கிராமங்களின் மக்களும் அச்சமடைந்துள்ளதாக ஐக்கிய தொழிலாளர் சமூக தொழிற்சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது விடயமாக ஐக்கிய தொழிலாளர் சமூக தொழிற்சங்கம் கஹவத்தையில் நேற்று(17) நடத்திய ஊடக சந்திப்பின்போது அதன் தலைவர் எஸ்.திருச்செல்வம் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சில தினங்களுக்கு முன் கஹவத்தை வெல்லந்துரை தோட்டத்தில் தொழிலாளர் ஒருவரால் அமைக்கப்பட்ட தற்காலிக கொட்டில் ஒன்று பொல்லுகள் சகிதம் வந்த மோட்டார் சைக்கிள்களில் முகமூடி தலைக்கவசம் அணிந்த குண்டர்கள் படையால் அடித்து நொறுக்கப்பட்டுள்ளது.

தோட்டக் காணிகளில் சட்டத்துக்கு முரணான விதத்தில் கட்டடங்கள் ஏதும் அமைக்கப்பட்டால் அதனை அகற்றுவதற்கு சட்டரீதியான அணுகுமுறைகள் பின்பற்றப்படல் வேண்டும். இவ்விடயத்தை தோட்ட நிர்வா கத்தினால் இலகுவாக தீர்த்திருக்க முடியும். அதாவது, பொலிஸில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்து நீதிமன்றத்தின் மூலமாக பொலிஸாரின் ஊடாக இக்கொட்டிலை அகற்றியிருக்கலாம். ஆனால், தோட்ட நிர்வாகம் தன்னுடைய சட்டவிரோத குண்டர் படையை ஏவி தொழிலாளர்களை அச்சுறுத்தி இக்கொட்டிலை உடைத்து நொறுக்கியுள்ளது. குண்டர்களின் இந்நடவடிக்கையால் தோட்ட மக்கள் மாத்திரமன்றி, தோட்டத்தை அண்மித்து வாழும் கிராம மக்களும் அச்சமடைந்துள்ளனர். எனவே, பொலிஸார் உட்பட பாதுகாப்புப் படையினர் இவ்விடயத்தில் அக்கறை செலுத்தி பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டுமெனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# மரம் முறிந்து வீழ்ந்து மாணவி உயிரிழப்பு

■ ஆ.ரமேஸ்

பூண்டுலோயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நியாங்கந்த பஹலுவத்தைப் பகுதியில் சனிக்கிழமை (16) மாலை 06 மணியளவில் இடம்பெற்ற மரம் முறிந்து விழுந்த விபத்தில் 17 வயது மாணவி உயிரிழந்துள்ளதாக பூண்டுலோயா பொலிஸார் தெரிவித்தனர்.

கண்டி, பூண்டுலோயா வழியாக அக்கரப்பத்தனை பகுதியை நோக்கி தனது தந்தையுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த நிலையில், பூண்டுலோயா பஹலுவத்தை பகுதியில் மரம் ஒன்று திடீரென முறிந்து விழுந்துள்ளது.

இதனால் மோட்டார் சைக்கிளின் பின் பகுதியில் அமர்ந்து பயணித்த மாணவி மீது பாரிய மரக்கிளை வீழ்ந்து பலத்த காயங்களுக்குள்ளான நிலையில் மாணவி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கோரச் சம்பவத்தில் அக்கரப்பத்தனை அப்பர் கிரேக்லி தோட்டத்தைச் சேர்ந்த விஜயராஜ் திவ்யராணி (வயது 17) என்ற மாணவியே உயிரிழந்துள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவ்வாறு உயிரிழந்த மாணவியின் சடலம் பிரேத பரிசோதனைக்காக கொத்மலை பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த பூண்டுலோயா பொலிஸார், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்தனர்.



மறைந்த மு.கா.தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப்பின் 16ஆவது ஞாபகார்த்த தினத்தையொட்டி மாத்தளை ஆமினா மகளிர் தேசிய பாடசாலையில் அஷ்ரப்பின் நாமத்தில் பிரார்த்தனை வைபவமொன்று நடைபெற்றது. இக்கல்லூரி அதிபர் பவாயிதா தலைமையில் அபிவிருத்திக் குழுவினர், அங்குள்ள சக ஆசிரியர்கள், இக்கல்லூரி மாணவிகள், ஆகியோர் கலந்துகொண்டனர். இந்நிகழ்வில் பிரார்த்தனையை மாத்தளை நகர மஸ்ஜித் பேஷ் இமாம் ஸகீ நடத்தினார்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# 200 வருட மலையக மக்களின் வரலாறு பற்றி பேசும்போது சிறுவர்களின் இன்றைய நிலைமையை மறக்க முடியாது

## மனித அபிவிருத்தி தாபன இயக்குனர் கலாநிதி சிவப்பிரகாசம்





இக்பால் அலி

200 வருட மலையக மக்களின் வரலாறு பற்றி பேசும்போது மலையக சிறுவர்களின் இன்றைய நிலைமையும் குறித்துப் பேசப்பட வேண்டும் என்று மனித அபிவிருத்தி தாபன இயக்குனர் கலாநிதி சிவப்பிரகாசம் தெரிவித்தார்.

''200 வருட மலையக மக்கள் வரலாறும் மலையக சிறுவர்களின் இன்றைய நிலைமையும்'' எனும் தொனிப்பொருளில் இடம்பெற்ற சிறார்களுக்கான செயலமர்வில் பிரதான வளவாளராக கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

குழந்தைகளை பாதுகாப்போம் அவர்களின் உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிப்போம். உலக மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் குழந்தைகள். எனவே அவர்கள் போர்கள், கலவரங்கள், போராட்டங்கள் மற்றும் இயற்கை பேரழிவுகளில் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். இந்த அடிப்படையில் பல நாடுகள் அவர்களைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை உணர்ந்து குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாக்க நடவடிக்கைகளை எடுத்துள்ளன.

இருப்பினும், குழந்தை தொழிலாளர் அல்லது குழந்தைகளை வேலைக்கு அமர்த்துவது உலகளாவிய சமூகப் பிரச்சினையாக தொடர்கிறது. குறிப்பாக, வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளில் கிராமப்புற மற்றும் குடிசை பிள்ளைகளை உள்ளடக்கியது. சில சமூகங்களில் வருமானம், குழந்தை தொழிலாளர் குடும்பங்களின் வாழ்வாதாரமாக உள்ளது. குழந்தைகள், பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்களைச் சார்ந்து இருக்கிறார்கள். எனவே, குழந்தைகளின் வாழ் உரிமை வளர்ச்சி, பாதுகாப்பு மற்றும் பாகுபாட்டுக்கு எதிராக பாதுகாப்பதற்கான பொறுப்புகள், பெற்றோர் அல்லது பாதுகாவலர்கள் மற்றும் அரசிடம் உள்ளது. 1991ஆம் ஆண்டு சர்வதேச சிறுவர் உரிமைகள் சாசனத்தை இலங்கை திருத்தியமைத்த போதிலும் சிறுவர்கள் மீதான பல்வேறு துஷ்பிரயோகங்கள் தடையின்றி தொடர்கின்றன. தோட்ட மற்றும் கிராமப்புற குழந்தைகளின் நலனை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மனித அபிவிருத்தி தாபனம் முன்னெடுத்துச் செல்கிறது என்பதை கவனத்தில்கொள்ள வேண்டும். சிறுவர்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மனித அபிவிருத்தி தாபனமானது நடைமுறைப்படுத்துகின்றது. மனித அபிவிருத்தி தாபனம் குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிப்பதற்கான பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்றார்.

# தென் சீனக்கடல் வலய வட்டமேசை மாநாடு ஒக்டோபரில் இலங்கையில்



தென் சீனக்கடல் வலய 8ஆவது ஷென்ஸன் வட்டமேசை மாநாடு (South China Sea Buddhist Shenzhen Roundtable) எதிர்வரும் ஒக்டோபர் 24, 25 மற்றும் 26ஆம் திகதிகளில் இலங்கையில் நடைபெறும்.

இந்த மாநாடு கொழும்பு ஹுனுப்பிட்டி கங்காராம விகாரையினால் நடத்தப்பட இருப்பதோடு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் ஆரம்ப நிகழ்வு நடைபெற உள்ளது.

இந்த வட்டமேசை மாநாட்டின் பூர்வாங்க ஏற்பாடு தொடர்பான கலந்துரையாடல் பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்னாயக்கவின் தலைமையில் நடைபெற்றது.

சீனாவின் ஷென்ஸன் வட்டமேசை மாநாடு வருடாந்தம் நடைபெற்று வருவதோடு ஒற்றுமையுடன் பயணித்து, பட்டுப்பாதையின் ஞானத்தை பெறுவோம் (Walk Together in Harmony and Gather the Wisdom of the Silk Road) என்ற தொனிப்பொருளின் கீழ் 22 நாடுகளின் பங்கேற்புடன் இம்முறை மாநாடு இலங்கையில் நடைபெறும் என்றும் இதன்போது அறிவிக்கப்பட்டது.

மாநாட்டை வெற்றிகரமாக நடத்தி முடிப்பதற்காக தொடர்புடைய அரசாங்க நிறுவனங்களின் ஊடாக நிறைவேற்றப்பட வேண்டிய விடயங்கள் குறித்தும் இதன்போது ஆராயப்பட்டது.

பௌத்த மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பௌத்த மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட தொடர்புள்ள அரச நிறுவன அதிகாரிகள் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றார்கள்.

# கணமூலையில் சிறுவர் சந்தை







ரஸீன் ரஸ்மின்

புத்தளம் தெற்கு கோட்டத்துக்குட்பட்ட கணமூலை முஸ்லிம் மகா வித்தியாலயம் மற்றும் நான்கு பாலர் பாடசாலைகள் இணைந்து ஏற்பாடு செய்த சிறுவர் சந்தை நிகழ்வு பாடசாலையின் மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை (14) இடம்பெற்றது.

கணமூலை முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் அதிபர் பி.எம்.முஸ்னி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முன்னாள் கற்பிட்டி பிரதேச சபை உறுப்பினர் பைஸர் மரிக்கார் உட்பட கோட்டக் கல்வி அலுவலக அதிகாரிகள் மற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி, பழைய மாணவர் சங்கங்களின் உறுப்பினர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் என பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

பாடசாலைகள் தோறும் சிறுவர் சந்தைகள் ஏற்படுத்தப்பட்டு மாணவர்களுக்கு கொடுக்கல் - வாங்கல் உட்பட வியாபார நுட்பம் உள்ளிட்ட துறைகளில் களப்பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

அந்த வகையில்தான் கணமூலை முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் தரம் - 1, தரம் - 2 மாணவர்களின் சந்தையும் கணமூலையில் உள்ள மதீனாபுரம் அல்- பிர்தௌஸ் பாலர் பாடசாலை, அல்-நூரியா பாலர் பாடசாலை, தாஹா பாலர் பாடசாலை, ரஹ்மத்புரம் நூராணியா பாலர் பாடசாலை மாணவர்களின் சந்தையும் இங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

# மருதானை சரிட்டி அமைப்பின் கல்விசார் செயற்பாடுகள் இக்ரா அங்குரார்ப்பணம்








Maradana Charity அமைப்பு பேருவளையில் சமூக சேவைகளை முன்னெடுத்துவரும் அமைப்பாகும். இவ் அமைப்பின் பெரும்பாலான திட்டங்கள் கல்வி சார்ந்தவையாகும். இந்த வருடம் முதல் Maradana Charity அமைப்பின் கல்விசார் செயற்பாடுகளுக்கு இக்ரா என பெயர் சூட்டப்பட்டுள்ளது. அதன் அங்குரார்ப்பண நிகழ்வும் முதலாவது செயற்றிட்டமும் சனிக்கிழமை(16) பேருவளை ஸேம் றிபாய் ஹாஜியார் தேசிய பாடசாலையில் இடம்பெற்றது.

Maradana Charity அமைப்பின் இக்ரா செயற்றிட்டத்தின் முதலாவது வேலைத்திட்டமாக இவ்வருடம் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை எழுதுகின்ற மாணவ, மாணவிகளுக்கு இலவச கருத்தரங்குகளை ஏற்பாடு செய்து வருகிறது.

அந்தவகையில், இக்கருத்தரங்கு தொடரின் முதலாவது கருத்தரங்கு சனிக்கிழமை பேருவளை ஸேம் றிபாய் ஹாஜியார் தேசிய பாடசாலை மாணவர்களுக்காக அப்பாடசாலையில் ஒழுங்கு செய்யப்பட்டது.

இந்நிகழ்வில் பிரபல ஆசிரியர் அர்ஷாத் புஹாரி கலந்து கொண்டார். மேலும் பாடசாலையின் அதிபர் குமார், Maradana Charity அமைப்பின் பொதுச் செயலாளர் ரூமி ஹாரிஸ், உப தலைவர் அஸ்கர் ஹாரிஸ், பொருளாளர் அப்ஹாம் வஹாப், இணைப்பாளர் நஜாத் நிஸாம் உட்பட பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் பலர் கலந்து கொண்டனர். இக்கருத்தரங்கில் நடத்தப்பட்ட பரீட்சையில் முதல் ஐந்து இடங்களை பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பதக்கங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இக்கருத்தரங்கு தொடரின் ஏனைய கருத்தரங்குகள் எதிர்வரும் நாட்களில் பேருவளை மருதானை அல்-பாஸியத்துல் நஸ்ரியா முஸ்லிம் பாலிகா மகா வித்தியாலயம், பேருவளை மருதானை அல்-பாஸியத்துல் நஸ்ரியா ஆண்கள் பாடசாலை, பேருவளை மஹகொடை ஐ.எல்.எம்.ஸம்ஸுதீன் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் மாணவ, மாணவிகளுக்கு இடம்பெறவுள்ளது.

மேலும் Maradana Charity அமைப்பின் இக்ரா அங்குரார்ப்பண நிகழ்வில் கடந்த வருடம் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த ஸேம் றிபாய் ஹாஜியார் தேசிய பாடசாலை மாணவி மஹ்ஸா மரியத்துக்கு சான்றிதழ், பதக்கம் மற்றும் பணப்பரிசில் என்பன வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# 2 நாட்களில் 2,862 கிலோ பீடி இலைகள் புத்தளத்தில் மீட்பு

ரஸீன் ரஸ்மின்



புத்தளம் - கற்பிட்டி பகுதிகளில் கடந்த இரண்டு நாட்களில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கைகளின்போது சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாக சந்தேகிக்கப்படும் 2,862 கிலோ கிராம் பீடி இலைகளை கைப்பற்றியுள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

மேலும், சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், டிங்கி இயந்திர படகு மற்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் கடற்படையினர் குறிப்பிட்டனர்.

புத்தளம் மாவட்டத்தின் கற்பிட்டி - வன்னிமுந்தல் களப்பு பிரதேசம் மற்றும் இலந்தையடி ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின்போதே மேற்படி பீடி இலைகள் கைப்பற்றப்பட்டதுடன், சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கற்பிட்டி, இலந்தடிய கடற்கரைப் பகுதியில் வடமேற்கு கடற்படை கட்டளைக்கு சொந்தமான தம்பபண்ணி கடற்படையினர் மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையின்போது சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாக சந்தேகிக்கப்படும் 2,223 கிலோ கிராம் பீடி இலைகள் கைப்பற்றப்பட்டன.

குறித்த பீடி இலைகள் 70 பொதிகளில் அடைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளதுடன், இதற்குப் பயன்படுத்தியதாக சந்தேகிக்கப்படும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதேவேளை, கற்பிட்டி வன்னிமுந்தல் கடற் பிரதேசத்தில் கடற்படையினர் மேற்கொண்ட சுற்றி வளைப்பு நடவடிக்கையின்போது, 19 உரைப் பைகளில் அடைக்கப்பட்ட நிலையில், 639 கிலோகிராம் பீடி இலைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

அத்துடன், இதற்கு பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் டிங்கி இயந்திரப் படகு ஒன்றும் கைப்பற்றப்பட்டதுடன் சந்தேகத்தின் பெயரில் இருவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் கற்பிட்டி பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் அவர்கள் 25 மற்றும் 45 வயதுடையவர்கள் என்றும் கடற்படையினர் குறிப்பிட்டனர்.

இவ்வாறு கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட பீடி இலைகள் மற்றும் டிங்கி இயந்திரப் படகு என்பவற்றுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கட்டுநாயக்க சுங்க அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் கடற்படையினர் மேலும் கூறினர்.

கடல் வழிகள் ஊடாக மேற்கொள்ளப்படும் பல்வேறு ஆட்கடத்தல் மற்றும் சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்த, கடற்படையினர் தீவைச் சுற்றியுள்ள கடற்பகுதி மற்றும் கடற்கரையை உள்ளடக்கி பல ரோந்து மற்றும் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பிரபுதேவாவை சந்தித்த பிரதமர் தினேஷ்



திரைப்பட படப்பிடிப்புக்காக இலங்கை வந்துள்ள இந்திய சினிமாக் கலைஞர் பிரபு தேவா பிரதமர் தினேஷ் குணவர்தனவை சந்தித்துள்ளார்.

இது குறித்த புகைப்படங்களை பிரதமர் அலுவலகம் தமது உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிட்டுள்ளது.

# ஹரக் கட்டா கொடுத்த பணத்தில் தமிழர் பகுதியில் காணி வாங்கிய பொலிஸ்காரர்

குற்றப் புலனாய்வுத் துறையின் காவலில் இருந்து தப்பிக்கும் ஹரக்கட்டாவின் திட்டத்துக்கு உதவிய குற்றப் புலனாய்வுத் திணைக்கள கான்ஸ்டபிள் டுபாய்க்கு தப்பிச்சென்று சொகுசான வாழ்க்கை வாழ வேண்டும் என்ற நோக்கத்தில், இந்த குற்றத்தில் ஈடுபட்டதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

குற்றப் புலனாய்வுத் துறையில் காவலர்களை சுட்டுக் கொன்றுவிட்டு வெளியில் வரும் ஹரக்கட்டாவையும் கான்ஸ்டபிளையும் பத்திரமாக அழைத்துச் செல்வதற்காக பாதாள உலகக் குழுவொன்று சொகுசு வாகனத்தில் திணைக்களத் தலைமையகத்துக்கு முன்பாக காத்திருந்ததும் தற்போது தெரியவந்துள்ளது.

குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் இருந்து தப்பிக்கும் திட்டத்துக்காகவும் அவருக்குச் செய்த அனைத்து உதவிகளுக்காகவும் ஹரக்கட்டா இந்த கான்ஸ்டபிளுக்கு அவ்வப்போது ஒரு கோடி ரூபாவுக்கு மேல் கொடுத்துள்ளது தெரியவந்துள்ளது.





சந்தேகநபர் தற்போது காணாமல் போயுள்ளதுடன், அவரை கைது செய்ய நான்கு பொலிஸ் குழுக்கள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளன.

ஹரக்கட்டா கொடுத்த பணத்தில் இருபது இலட்சம் ரூபாவை கான்ஸ்டபிள் தனது தாயாரிடம் இரண்டு முறை கொடுத்துள்ளதும் தெரியவந்துள்ளது.

அத்துடன், திருகோணமலையில் ரூ.50 இலட்சம் பெறுமதியான நெல் வயல் மற்றும் சில சொத்துகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

மேலும், இந்த கான்ஸ்டபிளுக்கு மடிக்கணினி, கைத்தொலைபேசி உள்ளிட்ட பல பெறுமதியான பொருட்களை ஹரக்கட்டா கொடுத்துள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

மடகஸ்கரில் இருந்து இலங்கைக்கு அழைத்து வரப்பட்ட பின்னர், ஹரக்கட்டா குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் காவலில் வைக்கப்பட்டிருந்ததோடு, அந்தக் காலப்பகுதியில் சந்தேகநபர் கான்ஸ்டபிளுடன் நெருங்கிய தொடர்பில் இருந்துள்ளார்.

ஹரக்கட்டா முதலில் இந்த கான்ஸ்டபிள் செய்த உதவிக்கு பதிலாக ஜப்பானுக்கு அனுப்புவதாக உறுதியளித்திருந்தார்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட பின்னர் சிறைக்கு அனுப்ப நீதிமன்றம் அனுமதிக்கும் என நினைத்து ஹரக்கட்டா இவ்வாறான வாக்குறுதியை அளித்துள்ளார்.

ஆனால், ஹரக்கட்டாவை மீண்டும் 90 நாட்கள் காவலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டதையடுத்து, கொந்தளித்த அவர், சிஐடி தலைமையகத்தில் இருந்து தப்பிச் செல்ல திட்டமிட்டார்.

அந்தத் திட்டத்தின்படி, பாதுகாப்புப் படையினரை சுட்டுக் கொன்றுவிட்டு சிஐடியில் இருந்து தப்பித்து டுபாய்க்குத் தப்பிச் செல்ல ஹரக்கட்டாவும் கான்ஸ்டபிளும் திட்டமிட்டனர்.

ஹரக்கட்டா தப்பிக்கும் திட்டத்தை இந்தியாவிலுள்ள ஒருவர் வழிநடத்தியதாக சந்தேகிக்கப்படுகிறது. இந்த தரப்பினர் பொலிஸ் கான்ஸ்டபிள் ஊடாக தொலைபேசியில் பேசி, திட்டத்தை செயற்படுத்தியதாக சந்தேகிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும், கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு மற்றும் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவு உள்ளிட்ட 04 பொலிஸ் குழுக்கள் இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றன.